பெயர் மாற்றம்
விளம்பரம் செய்ய
ஸ்கேன் செய்யவும்

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 10 பக்கம் விலை 4.00

# மக்கள் குரல்

SINCE 1973
நடுநிலை நாளேடு

Regd. No. TN/CC(S)DN/122/24-26

சென்னை – 5.2.2026 – வியாழன் ✱ மலர் – 53 ✱ இதழ் – 151

RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/24-26

✱ திருவள்ளூர் ✱ செங்கல்பட்டு ✱ காஞ்சிபுரம் ✱ விழுப்புரம் ✱ கள்ளக்குறிச்சி ✱ திருவண்ணாமலை ✱ கடலூர் ✱ வேலூர் ✱ திருப்பத்தூர் ✱ ராணிப்பேட்டை மாவட்டங்கள் | புதுச்சேரி மாநிலம், ஆந்திரப் பிரதேசம், கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் புதுடெல்லி ஆகிய பகுதிகளை இந்த பதிப்பு உள்ளடக்கியது

ENROLLMENT
விளம்பரம் செய்ய
ஸ்கேன் செய்யவும்

## எதிர்க்கட்சிகள் அமளியால் மக்களவை முடங்கியது

# பிரதமர் மோடி பேசாமலேயே ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறியது

புதுடெல்லி, பிப். 5–

**இன்றும் மக்களவையில் எதிர்க்கட்சிகளின் அமளியால் சபை முடங்கியது. இந்நிலையில் பிரதமர் மோடியின் பதிலுரை இல்லாமலேயே ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

*(முன்பு 2004ம் ஆண்டு ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் பிரதமரின் பதிலுரை இல்லாமலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.)*

மக்களவை இன்று காலை தொடங்கியவுடன் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இந்நிலையில், சபையை பகல் 12 மணிவரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார். மீண்டும் 12 மணிக்குத் திரும்பவும் அமளி ஏற்பட்டதால் சபை பிற்பகல் 2 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி உரை மீதான விவாதத்தில் முன்னாள் ராணுவத் தளபதி நரவணேவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சீன எல்லைப் பிரச்சினை குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை பேச அனுமதிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த 8 தமிழக எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு பிரதமர் மோடி நேற்று மாலை 5 மணிக்கு பதிலுரை அளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், எதிர்க்கட்சிகளின் கடும் அமளி காரணமாக பிரதமர் மோடியின் பதிலுரை நேற்று ரத்து செய்யப்பட்டது. எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மோடி பேசுவதற்கு முன்பே, மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதுபற்றி நேற்று பா.ஜ.க. எம். பி. மனோஜ் திவாரி கூறும்போது, எதிர்க்கட்சிகளை சேர்ந்த பல பெண் எம். பி.க்கள், அவையின் மத்திய பகுதிக்கு வந்தனர். பின்னர் அவர்கள் பிரதமர் நாற்காலியை நோக்கி திரண்டு சென்றனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பு காணப்பட்டது.அவர்களை இருக்கைக்கு திரும்பும்படி, மூத்த அமைச்சர்கள் பலர் தொடர்ந்து கேட்டு கொண்டனர். ஆனால், அதனை அவர்கள் கேட்கவில்லை என்றார். நிலைமை கட்டுப்பாட்டை மீறி சென்றது. இதனால் பிரதமர் மோடியால் அவைக்குள் வர முடியவில்லை என்றார்.

இந்த நிலையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து இந்தியா கூட்டணி எம்பிக்களுடன் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி இன்று ஆலோசனை நடத்தினர். இந்த ஆலோசனையில் தி.மு.க. மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

### ராகுலுக்கு அனுமதி மறுப்பு

இன்று காலை 11 மணிக்கு மக்களவை கூடியவுடன் ராகுல் காந்தியை பேச அனுமதிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். அவைத் தலைவரின் இருக்கையை முற்றுகையிட்டு பதாகைகளுடன் முழக்கங்கள் எழுப்பியதால் பரபரப்பான சூழல் நிலவியது. இதனையடுத்து அவை கூடிய சில நொடிகளில் அவையை பகல் 12 மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார். மீண்டும் 12 மணிக்கு சபைக்கு வந்த உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். பாதுகாப்பை காரணம் காட்டி பிரதமர் அவை வரமுடியவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, பிரதமரின் பதிலுரை இல்லாமலேயே எதிர்க்கட்சிகள் கடும் அமளிக்கு மத்தியில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை குரல் வாக்கெடுப்பு நடத்தி சபாநாயகர் ஓம் பிர்லா நிறைவேற்றினார். தொடர்ந்து பகல் 2 மணி வரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மாநிலங்களவையில் இன்று மாலை 5 மணிக்கு பிரதமர் மோடி பதிலுரை ஆற்றவுள்ளார்.

### மாநிலங்களவையில் வாக்குவாதம், வெளிநடப்பு

மாநிலங்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் மத்திய அமைச்சர் ஜெ.பி. நட்டா இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இன்று காலை மாநிலங்களவை கூடியவுடன், மக்களவையில் ராகுல் காந்தியை பேச அனுமதிக்காதது குறித்து மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பினார்.

“நாடாளுமன்றம் என்றால் மாநிலங்களவையும், மக்களவையும் சேர்ந்ததுதான். மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் நாட்டின் நலன்கள் குறித்துப் பேச விரும்பினார், ஆனால் அவருக்குப் பேச அனுமதி மறுக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலையில் அவையை எப்படி நடத்த முடியும்?” எனக் கேட்டார். இதற்கு பதிலளித்த ஜெ.பி. நட்டா, ”மக்களவையின் நடவடிக்கைகளை மாநிலங்களவையில் விவாதிக்க முடியாது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தெரிந்துகொள்ள வேண்டும்” என்றார்.

நரவணேவின் புத்தகத்தை காண்பித்து கார்கே பேசியதற்கு எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்து கோஷம் போட்டனர். இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.










# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று அமைச்சரவைக் கூட்டம்

சென்னை, பிப். 5–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று தமிழக அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

நிகழாண்டுக்கான தமிழக சட்டசபை கூட்டத் தொடர் கவர்னர் உரையுடன் கடந்த ஜனவரி 20ம் தேதி தொடங்கி 24ம் தேதி வரை நடைபெற்றது. தமிழக சட்டசபைக்கு இன்னும் 2 மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளதால் தற்போதைய அரசு இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்யும். தேர்தல் முடிந்த பிறகு முழு பட்ஜெட்டை புதிய அரசு தாக்கல் செய்யும். கடந்த பிப்ரவரி – 1ம் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் கூட்டத் தொடர் பிப்ரவரி இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்தில் நடைபெறும் என தெரிகிறது.

கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்னதாக அமைச்சரவை கூடி விவாதிப்பது வழக்கம். அதன்படி தமிழக அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெற்றது. சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள அமைச்சரவைக் கூட்ட அறையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழக அரசு தாக்கல் செய்யப்பட உள்ள இடைக்கால பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது.

# ஆர்டர்லி முறை ஒழிப்பு: ஐகோர்ட்டில் தமிழக அரசு பதில் மனு தாக்கல்

சென்னை, பிப். 5–

தமிழ்நாட்டில் ஆர்டர்லி முறையை ஒழிப்பதற்காக மாவட்ட அளவில் குழு அமைப்பது தொடர்பாக அரசாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளதாக, தமிழக அரசு சென்னை ஐகோர்ட்டில் தெரிவித்துள்ளது.

கோயில் நிலத்திற்கும், தனக்கும் பாதுகாப்பு வழங்கக் கோரி சேலத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவர் தாக்கல் செய்திருந்த வழக்கில், தமிழ்நாட்டில் ஆர்டர்லி முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டுமென கடந்த 2022ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு முழுமையாக பின்பற்றப்பட்டதா? என சென்னை ஐகோர்ட் கேள்வி எழுப்பியிருந்தது. ஆர்டர்லி முறையை ஒழிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கலாம் என ஐகோர்ட் யோசனை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், சி.குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ஆஜராகி, ஆர்டர்லி முறையை ஒழிப்பது குறித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் குழு அமைப்பது தொடர்பாக அரசாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளதாக கூறி அதற்கான அரசாணையை தாக்கல் செய்தார். மேலும், அரசாணையை ஆக்கப்பூர்வமாக செயல்படுத்தியது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் அளிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், விசாரணையை நான்கு வாரங்களுக்கு தள்ளிவைத்தனர்.



## நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை சார்பில்

# ரூ.3511 கோடியில் 183 முடிவுற்ற திட்டங்கள்: ஸ்டாலின் திறந்தார்; ரூ.1267 கோடி திட்டங்களுக்கு அடிக்கல்

சென்னை, பிப்.5–

முதலமைச்சர் ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 2378.30 கோடி ரூபாய் செலவில் 9 முடிவுற்ற பணிகளையும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 635.30 கோடி ரூபாய் செலவில் 22 முடிவுற்ற பணிகளையும்,

நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 237.04 கோடி ரூபாய் செலவில் 62 முடிவுற்ற பணிகளையும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தின் சார்பில் 174.45 கோடி ரூபாய் செலவில் 27 முடிவுற்ற பணிகளையும், சென்னை மாநகராட்சி சார்பில் 86.04 கோடி ரூபாய் செலவில் முடிவுற்ற 63 பணிகளையும், திறந்து வைத்தார்.

மேலும், சென்னை மாநகராட்சி சார்பில் 335.62 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய திட்டப் பணிகளுக்கும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 932 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி, சென்னை குடிநீர் வாரியத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 47 லட்சம் ரூபாய் மதிப்பிலான 5 வாகனங்களை அலுவலர்களுக்கு வழங்கினார்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், ராசிபுரம் நகராட்சி 8 பேரூராட்சிகள் மற்றும் இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம், எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம், பரமத்தி ஆகிய 7 ஒன்றியங்களுக்குட்பட்ட 1070 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 11 ஊராட்சிகளுக்கு 1138.41 கோடி ரூபாய் செலவிலான 2 கூட்டுக் குடிநீர் திட்டங்ளை திறந்து வைத்தார்.

மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சி குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளுக்கு 591.14 கோடி ரூபாய் செலவிலான பாதாள சாக்கடை திட்டம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி நகராட்சிக்கு 62.82 கோடி ரூபாய் செலவிலான பாதாள சாக்கடை திட்டம் என மொத்தம் 653 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவில் 4 லட்சத்து 49 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையிலான 2 பாதாள சாக்கடைத் திட்டங்களை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

மணலி, ஆலந்தூர் (முகலிவாக்கம்), பெருங்குடி (பள்ளிக்கரணை), மற்றும் சோழிங்கநல்லூர் (உத்தண்டி, ஒக்கியம்துரைப்பாக்கம்) ஆகிய மண்டலங்களில் 188 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள்.

மாதவரம், தண்டையார்பேட்டை, அம்பத்தூர் மற்றும் அண்ணாநகர் மண்டலங்களில் உள்ள நீர் நிலைகளில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் பொருட்டு 106 கோடி 42 லட்சம் செலவில், பாடி மேம்பாலத்திலிருந்து கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வரை மாற்றியமைக்கப்பட்ட பிரதான கழிவுநீர் உந்து குழாய்கள் உட்பட மொத்தம் 635 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 22 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

புதிய திட்டங்களுக்கு அடிக்கல்

சர்தார் பட்டேல் சாலைவேளச்சேரி பிரதான சாலை சந்திப்பிலிருந்து குருநானக் கல்லூரி சந்திப்பு வரை 200 அடி சாலையில் 310 கோடி ரூபாய் மதிப்பீட்டில்புதியமேம்பாலம்,மணலி மண்டலம், செட்டிமேடு பகுதியில் 6.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்ளரங்க கபடி மைதானம் மற்றும் திறந்தவெளி கால்பந்து மைதானம், மாதவரம் மண்டலம், சி.எம்.டி.ஏ. டிரக் டெர்மினல் பகுதியில் 4.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு வளாகம், மாதவரம் மண்டலம், திருவள்ளுவர் தெரு, புத்தகரத்தில் 4.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதல்வர் படைப்பகங்கள், ரூ.9.54 கோடி மதிப்பீட்டில், மாதவரம், தண்டையார்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பிரத்யேக வசதிகளுடன் கூடிய 2 பூங்காக்கள் என 4 பூங்கா மேம்பாட்டு பணிகள்

என மொத்தம் 335.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

### குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள்

புழலில் செயல்பட்டு வரும் நாளொன்றுக்கு 300 MLD கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை 555 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 310 MLD கொள்ளளவு கொண்ட நிலையமாக மறுசீரமைத்து மேம்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

376 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அடையாறு மண்டலம், பள்ளிப்பட்டு மற்றும் திருவான்மியூர் பகுதிகளில் தொடர்ச்சியான குடிநீர் விநியோகம் செயல்படுத்தும் பணிகள்

என மொத்தம் 932 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.



அம்ரித் நிலையத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர், அம்பத்தூர் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய ரயில் நிலையங்களில் நடைபெறும் பணிகளை சென்னை கோட்ட ரெயில்வே மேலாளர் சைலேந்திர சிங் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது கூடுதல் கோட்ட ரயில்வே மேலாளர் அங்கூர் சவுகான், துணைத் தலைமைப் பொறியாளர் (கதி சக்தி) ஆர். ராமகிருஷ்ணன், முதுநிலை கோட்ட இயக்க மேலாளர் சத்ய நாராயணஹரி உடனிருந்தனர்.

மக்கள் குரல்

05–02–2026

# உலகத் தர வாகன உற்பத்தியில் தமிழ்நாடு!

தமிழ்நாடு நாட்டின் தொழில்துறை முன்னேற்றத்தின் முன்னணிக் குரலாக இருப்பதுதான் உண்மை. விவசாயம், தகவல் தொழில்நுட்பம், உற்பத்தித் தொழில், ஏற்றுமதி—என்ற அனைத்துத் துறைகளிலும் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணித்து வரும் ஒரு மாநிலம் தமிழ்நாடு.

டாடா மோட்டார்ஸ், வின்ஃபாஸ்ட் போன்ற உலகளாவிய நிறுவனங்களின் வருகை, மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் புதிய உந்துதலை அளித்து, தமிழ்நாட்டை “இந்தியாவின் ஆட்டோமொபைல் மற்றும் EV தலைநகரம்” என்ற நிலைக்கு மேலும் உறுதியாக உயர்த்தும்.

இந்நிலையில், ராணிப்பேட்டை மாவட்டம் நேமிலி தாலுகாவில் உள்ள பனப்பாக்கம் SIPCOT தொழில் வளாகத்தில் உருவாகி வரும் டாடா மோட்டார்ஸ் கார் உற்பத்தி தொழிற்சாலை, மாநிலத்தின் பொருளாதார வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கவுள்ளது.

தொழில் மையம்:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் இந்த மிகப்பெரிய உற்பத்தி திட்டத்தைத் தொடங்கி வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முதன்முறையாக, ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) பிரீமியம் வாகனங்கள் முழுமையான உற்பத்தி நிலையிலேயே தயாரிக்கப்படவுள்ள இந்த தொழிற்சாலை, தமிழ்நாட்டின் ஆட்டோமொபைல் தொழில் மையத்தின் முக்கியத்துவத்தை மேலும் உயர்த்தும். இதுவரை இறக்குமதி செய்யப்பட்டு அல்லது தொகுத்து தயாரிக்கப்பட்ட இந்த உயர் தர வாகனங்கள், இனி தமிழ்நாட்டிலேயே “மெயின் இன்இண்டியா” என்ற முத்திரையுடன் உலக சந்தைக்கு செல்லவுள்ளன.

சுமார் ரூ 9,000 கோடி முதலீட்டில், 470 ஏக்கர் பரப்பளவில் உருவாகும் இந்த திட்டம், ஆண்டுக்கு 2.5 லட்சம் வாகனங்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக திட்டமிடப்பட்டுள்ளது. நேரடி மற்றும் மறைமுகமாக 5,000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, ராணிப்பேட்டை மாவட்டத்தின் பொருளாதார வடிவத்தை மாற்றக்கூடிய சக்தி கொண்டது. தொழிலாளர், சிறு தொழில்கள், சேவைத் துறை எல்லாவற்றிலும் பரவலான தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேலும், இந்த தொழிற்சாலை “பசுமை தொழிற்சாலை” என்ற இலக்குடன் 100% புதுப்பிக்கத்தக்க ஆற்றலால் இயக்கப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எதிர்கால மின்சார வாகன உற்பத்திக்கும் தயாராக இருப்பது, தமிழ்நாட்டை இந்தியாவின் EV உற்பத்தி மையமாக மாற்றும் நோக்கில் முக்கிய அடியெடுப்பாகும்.

உலகத்தர வாகன உற்பத்தி மையம்:

பனபாக்கம் SIPCOT தொழில் வளாகம் சுமார் 1,200 ஏக்கர் நிலத்தில் உருவாக்கப்பட்டு, தொழில்துறை வளர்ச்சிக்கான புதிய தளமாகக் களமிறங்கியுள்ளது. இங்கு டாடா மோட்டார்ஸ் முதலாவது நிறுவனமாக செயல்படத் தொடங்குவது, மற்ற பெரிய தொழில் முதலீடுகளுக்கும் வழிகாட்டியாக அமையும்.

இன்றைய உலகளாவிய பொருளாதார சூழலில், தொழில்துறை முதலீடுகளை ஈர்க்கும் மாநிலங்களே முன்னேற்றத்தை உறுதி செய்கின்றன. டாடா மோட்டார்ஸ் போன்ற உலகளாவிய நிறுவனத்தின் பெரிய முதலீடு, தமிழ்நாட்டின் தொழில் கொள்கைகளுக்கும், நிர்வாக திறனுக்கும் கிடைத்த நம்பிக்கையின் சான்று.

மேலும், வியட்நாமைச் சேர்ந்த வின்ஃபாஸ்ட் (VinFast) மின்சார கார்கள் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள அதன் உற்பத்தி மையத்திலிருந்து தயாராகி இன்னும் சில வாரங்களில் விற்பனைக்கு வந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தமிழ்நாட்டை மின்சார வாகன உற்பத்தி வரைபடத்தில் முக்கிய இடத்திற்கு கொண்டு செல்லும் இன்னொரு மைல்கல்லாகும்.

தமிழ்நாடு இனி வெறும் “உற்பத்தி மையம்” மட்டுமல்ல; “உலக தர வாகன உற்பத்தி மையம்” என்ற புதிய அடையாளத்தைப் பெறத் தயாராகி வருகிறது.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் நடைபெற்ற அரசு விழாவுக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வெள்ளி வீர வால் வழங்கினார். அருகில் மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் ,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.

# சிஎஸ்கே – திருவள்ளூர் இன்டர் காலேஜ் போட்டி: இந்து கல்லூரி அரையிறுதிக்கு தகுதி

திருவள்ளூர், பிப். 5–

சிஎஸ்கே–திருவள்ளூர் டிசிஏ இன்டர் காலேஜ் டி20 கிரிக்கெட் போட்டியின் கால் இறுதி போட்டிகள் நடைபெற்றது.

முதல் போட்டியில் ஸ்ரீஹெர் மார்க் கிரிகோரியஸ் கல்லூரி – வேல்டெக் மல்டி டெக் அணிகள் மோதின. முதலில் பேட் செய்த ஸ்ரீஹெர் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 178 ரன்கள் குவித்தது. எஸ். ஸ்ரீச்சரண் 80 ரன்கள் (அவுட் இல்லை) எடுத்து அணியின் முதுகெலும்பாக விளங்கினார். தொடர்ந்து விளையாடிய வேல்டெக் மல்டி டெக் அணி 90 ரன்களில் சுருண்டது.

மார்க் கிரிகோரியஸ் கல்லூரி – வேல்டெக் டாக்டர் சங்குந்தலா அணிகளுக்கு இடையேயான 2வது போட்டி சுவாரஸ்யமாக நடைபெற்றது. முதலில் மார்க் கிரிகோரியஸ் அணி 142 ரன்கள் அடித்தது. 143 ரன் இலக்குடன் களம் இறங்கிய வேல்டெக் அணி 126 ரன்களில் ஆல் அவுட்டானதால் மார்க் கிரிகோரியஸ் வெற்றியை உறுதி செய்தது.

மற்றொரு போட்டியில் இந்து கல்லூரி அணி, வேல்டெக் ஹை டெக் அணியை எதிர்த்து விளையாடியது. இந்து கல்லூரி அணி 120 ரன்கள் அடித்த நிலையில் அதன்பின் களம் இறங்கிய வேல்டெக் ஹை டெக் கல்லூரி 84 ரன்களில் வெளியேறியது.

கடைசி காலிறுதி போட்டியில் ஜெயா ஆர்ட்ஸ் அணி கோஜன் எஸ்பிடி அணிள் மோதின. முதலில் ஆடிய ஜோஜன் கல்லூரி அணி 85 ரன்கள் அடித்த நிலையில் அடுத்த களம் இறங்கிய ஜெயா கல்லூரி அணி 10.2 ஓவர்களில் 86 ரன்கள் அடித்து அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# ஸ்டாக்ஹோல்டிங் சர்வீசஸ் சார்பில் ‘StockFin 2.0’ முதலீட்டு செயலி அறிமுகம்

சென்னை, பிப். 5

ஸ்டாக்ஹோல்டிங் சர்வீசஸ் சார்பில் ‘StockFin 2.0’ முதலீட்டு செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் முழுமையான துணை நிறுவனமும், SEBIயில் பதிவு செய்யப்பட்ட கார்ப்பரேட் ஸ்டாக் புரோக்கர் நிறுவனமுமான ஸ்டாக் ஹோல்டிங் சர்வீசஸ் லிமிடெட், இந்தியா முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு எளிய, பாதுகாப்பான மற்றும் தடையற்ற முதலீட்டு அனுபவத்தை வழங்கும் நோக்கில் ‘StockFin 2.0’ என்ற அடுத்த தலைமுறை நவீன முதலீட்டு செயலியை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்த செயலி, முதலீட்டாளர்கள் நம்பிக்கையுடன் முதலீடு செய்யவும், முதலீடுகளை பகுப்பாய்வு செய்யவும் மற்றும் நிதி வளத்தை அதிகரிக்கவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. StockFin 2.0 மூலம் ஈக்விட்டி பங்குகள், டெரிவேட்டிவ்கள் (F&O), ஸ்டாக் SIPகள், மியூச்சுவல் ஃபண்ட்கள், ETFகள், SME ஸ்டாக்ஸ் மற்றும் IPOகள் உள்ளிட்ட பல்வேறு முதலீட்டு வாய்ப்புகள் இந்த ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுகதை

# SSR பங்கஜம் சாலை..! (சாலை 116)

ராஜா செல்லமுத்து

சென்னை, சாலிகிராமம் பகுதியில் இருக்கும் காவேரி கார்னர் டீக்கடையில் கூடியிருந்தார்கள், உதவி இயக்குநர்கள்.


"அருணாச்சலம் சாலையைப் பற்றி சொல்லிட்டிங்க. அந்தச் சாலையில தான் நாம இப்ப இருக்கிறோம். பக்கத்தில இருக்கிற இந்த SSR பங்கஜம் சாலையைப் பற்றிச் சொல்ல முடியுமா மாப்பிள்ளை? "

என்று, புகழேந்தியிடம், விஜயசேகரன் கேட்க, " ம்... சொல்றேன் மாப்ள,

SSR பங்கஜம் சாலை புகழ்பெற்ற தமிழ் திரைப்பட நடிகர் மற்றும் அரசியல்வாதி S.S.ராஜேந்திரன். இவரது முழுப் பெயர் சேதுபதி சீதாபதி இந்த இரண்டு பெயர்களின் முதல் எழுத்தையே தன்னோட பெயரின் முதல் எழுத்தாக SS என்று வைத்துக் கொண்டார். இவருக்கு மூன்று மனைவிகள். தன் முதல் மனைவி பங்கஜம் நினைவாக பெயரிடப்பட்டது. இவர் SS ராஜேந்திரனின் மனைவி மட்டுமல்ல. அவரது கலை, அரசியல் வாழ்க்கையிலும் உறுதுணையாக இருந்தவர்.

இந்தச் சாலை சென்னையின் மேற்குப் பகுதியான சாலிகிராமத்தில் இருக்கிறது. அருணாச்சலம் சாலை மற்றும் ஆற்காடு சாலையை இந்தச் சாலை இணைக்கிறது. வடபழனி, சாலிக்கிராமம் பகுதிகளில் நம்ம திரைப்படத் துறையினர் சந்திக்கும் முக்கிய இடமாக இருப்பதால் SS ராஜேந்திரன் இந்த பகுதியில் வசித்ததாலும், இந்தப் பகுதியில் SSR பங்கஜம் தியேட்டர் ஒலிப்பதிவுக் கூடம் கட்டியதாலும் இந்தச் சாலைக்கு அவர் மனைவியின் பெயர் சூட்டப்பட்டது.

இது தமிழ் சினிமாவில் முக்கிய அடையாளமாக இருக்கிறது. 1977–ம் ஆண்டு சாலிகிராமம் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. 1960களில் இந்தப் பகுதி விவசாய நிலமாக இருந்தது. 1970–2000க்கு பின் தியேட்டர், ஸ்டுடியோக்கள்




வருகையால் பிரபலமானது. அந்தக்காலத்தில் சென்னை மவுண்ட் ரோட்டில், (இப்போ அது அண்ணா சாலை) மட்டும் தான் திரையரங்குகள் இருந்தன. அங்கு போய் பெரும் சிரமத்தைப் போக்குவதற்காக சாலிக் கிராமத்தில் SSR பங்கஜம் தியேட்டரைக் கட்டினார், SS ராஜேந்திரன். இதனால் இந்தப் பகுதி இரண்டாவது அண்ணா சாலை என்றே அழைக்கப்பட்டது" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

புகழேந்தி. " ம்.. மேல சொல்லுங்க" என்று விஜயசேகரன் கேட்க

" வடபழனி, கோடம்பாக்கம், சாலிகிராமம் இந்தப் பகுதிகள் எல்லாம் திரைப்படத் துறையினரின் புகலிடமாக இருக்கிறது. அதனால் SS ராஜேந்திரன் இந்த இடத்தில் ஒரு தியேட்டரையும் தொழில்நுட்பக் கூட்டத்தையும் கட்டினார். 1972–ம் ஆண்டு இந்தச் சாலை, சென்னையின் மிக முக்கியமான அடையாளமாக விளங்கியது. இந்தத் திரையரங்கம் 1972 ஆம் ஆண்டு இது தொடங்கப்பட்டது. அந்தக் காலத்தில் நவீன வசதிகளுடன் இருந்தது.

திராவிட இயக்கக் கொள்கைகளின் பிடிப்பு கொண்ட SSR புராணப் படங்களில் நடிக்க மாட்டேன் என்ற கொள்கையில் இருந்ததால் லட்சிய நடிகர் என்று அழைக்கப்பட்டார். அவர் இந்த பகுதியில் தனது நாடகக் குழுவான SSR நாடக மன்றம் மூலமாகவும் கலைச் சேவை செய்து வந்தார்.

1962 ஆம் ஆண்டு தேனி தொகுதியில் இருந்து சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நடிகர் என்ற பெருமை SS ராஜேந்திரனுக்கு உண்டு. இந்தச் சாலையில் அமைந்துள்ள அவரது வீட்டிற்கு அந்தக் காலத்தில் இருந்த அரசுத் தலைவர்கள் மற்றும் துறை நட்சத்திரங்கள் அடிக்கடி கூடும் இடமாக இருந்தது. பகுத்தறிவு மற்றும் திராவிடக் கொள்கைகள் வளர்ப்பதில் இந்த இடம் முக்கியமான பங்கு வகித்தது.

இப்பகுதி முன்பு கிராமப்புற சூழலில் இருந்தது. SSR போன்ற ஜாம்பவான்கள் குடியேறியதால் ஸ்டுடியோக்கள் அமைந்த பிறகு இது நவீனத் திரைத் துறையின் புகலிடமாக மாறியது .1970 1980களில் SSR பங்கஜம் தியேட்டர் மக்களின் விருப்பமான தியேட்டராக இருந்தது. குறைந்த கட்டணம் நல்ல திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

அது மட்டுமில்லாமல் SS ராஜேந்திரன தூய தமிழில் பேசுவதில் வல்லவர். இந்தச் சாலையில் இருந்த அவரது ஸ்டுடியோ மட்டும் இல்லத்தில் பல திராவிட இயக்கத் தலைவர்களான அண்ணா, கலைஞர் போன்றோர் கூடிப் பேசி உள்ளார்கள். கலைஞர் பல படங்களுக்கு இங்கு உட்கார்ந்து தான் வசனம் எழுதியிருக்கிறார். SS ராஜேந்திரன் தமிழ் மொழிப் பற்றும் திராவிட அரசியலும் இந்தச் சாலையில் வளர்ந்திருக்கிறது. 2014–ல் SS ராஜேந்திரன் இறந்த போது அவரது உடல் அஞ்சலிக்காக இந்தச் சாலையில் உள்ள அவரது வீட்டின் முன் வைக்கப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் அஞ்சலி செலுத்தினார்கள் " என்று SSR பங்கஜம் சாலையைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருந்தார், புகழேந்தி.

" SSR பங்கஜம் திரையரங்கம் இருந்த இடத்தில் இன்று SSR பங்கஜம் என்கிளேவ் என்ற பிரம்மாண்ட குடியிருப்பு கட்டப்பட்டிருக்கிறது. இந்த சாலையைச் சுற்றி பல ஸ்டுடியோகள் இருக்கின்றன. நெக்சஸ், விஜயா ஃபோரமால், பிரசாத் ஸ்டுடியோ, பிரசாத் லேபரட்டரி, ஏவிஎம் ஸ்டுடியோ இருக்கிறது. SS ராஜேந்திரன் தன் முதல் மனைவி பங்கஜத்தை அதிர்ஷ்ட தேவதை என்றே நம்பினார். அதனால்தான் அவர் வாங்கிய நிலம் கட்டிடம் எல்லாவற்றிக்கும் அவர் பெயரையே வைத்தார். அந்தக் காலத்தில் ஆற்காடு சாலையில் இருந்து செல்ல தன் சொந்த நிலத்தையே பாதையாகக் கொடுத்தார். " என்று புகழேந்தி சொல்ல,

" அவர் எங்க பிறந்தார் ? எப்படி இறந்தாருன்னு சொல்ல முடியுமா ?"

என்று விஜயசேகரன் கேட்க, " S.S. ராஜேந்திரன் ஜனவரி 1. 1928 மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகில் உள்ள சேடப்பட்டியில் பிறந்தார். அக்டோபர் 24–ந் தேதி 2014–ம் ஆண்டு தனது 86வது வயதில் நுரையீரல் தொற்று காரணமாகச் சென்னையில் மரணம் அடைந்தார்.

இந்தச் சாலை ஆற்காடு சாலை, சாலிகிராமம் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் இருந்து தொடங்குகிறது. அருணாச்சலம் சாலையைச் சென்றடைந்து, அதே பகுதியில் முடிகிறது.

இந்தச் சாலை அந்தப் பகுதியின் முக்கியப் போக்குவரத்துச் சாலையாக இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கும் ஐயப்பசாமி கோயில் மிகவும் பிரபலமானது. சாமி படங்களில் நடிக்க மாட்டேன் என்று லட்சியத்தோடு இருந்த லட்சிய நடிகர் SS ராஜேந்திரன் மனைவி பங்கஜம் அவர்கள் கட்டியதுதான் இந்த ஐயப்ப சாமி கோயில்.

அருணாச்சலம் சாலையில் உள்ள காவேரிக் கார்னர் டீக் கடையில் எலலோரும் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள் , SSR பங்கஜம் சாலையைப் பற்றித் தனக்குத் தெரிந்ததைச் சொல்ல ஆரம்பித்தார், தனுஷூக்கு பேர் சொல்ல வைத்த படைப்பாளி – ‘திருடா திருடி’ படத்தின் (மன்மத ராசா... மன்த ராசா பாடல் பட்டிதொட்டிகளில் பரபரப்பானது.) டைரக்டர் சுப்பிரமணிய சிவா.



# கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சை கோவில் நிர்வாக – பராமரிப்பு செலவுக்கு ரூ.36 கோடி மானியம்: முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

## முக்திநாத் பயண 389 பக்தர்களுக்கு ரூ.1.17 கோடி மானியம்

சென்னை, பிப். 5–

கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் தேவஸ்தான கோயில்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான உயர்த்தப்பட்ட அரசு மானியம் ரூ.36 கோடிக்கான காசோலைகள், இதேபோல முக்திநாத் ஆன்மிகப் பயணம் மேற்கொண்ட 389 பக்தர்களுக்கு அரசு மானியமாக ரூ.1.17 கோடிக்கான காசோலைகள் வழங்கினார்.

இதேபோல ஆன்மிகப் பயணம் மேற்கொண்டவர்களுக்கு அரசு மானியம் தலா ரூ.30,000 வீதம் 1.17 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு அதற்கான காசோலைகளை வழங்கினார்.

கடந்த 57 மாதங்களில் 12,803 திருக்கோயில்களில் 8,607 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 29,149 திருப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில், 4,992 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 16,595 திருப்பணிகள் நிறைவுபெற்றுள்ளன. இதுவரை 4,087 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, 8,347.56 கோடி ரூபாய் மதிப்பிலான 8,082.70 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

### மானசரோவர் பயணம்...

இந்த அரசு பொறுப்பேற்றபின், 9.94 கோடி ரூபாய் அரசு நிதியில் அறுபடை வீடுகளுக்கு 4,015 பக்தர்களும், இராமேஸ்வரம் – காசி ஆன்மிகப் பயணத்திற்கு 1,520 பக்தர்களும், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கு 3,004 பக்தர்களும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கு 3,014 பக்தர்களும் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதோடு, முக்திநாத் ஆன்மிகப் பயணம் மேற்கொண்ட 1,034 பக்தர்களுக்கு 2.36 கோடி ரூபாய் அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மானசரோவர் ஆன்மிகப் பயணம் செல்ல அனுமதி வழங்கப்படாததால் அரசு மானியம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் துரை. இரவிச்சந்திரன், பொ.ஜெயராமன், கோ.செ. மங்கையர்க்கரசி, சி. கல்யாணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

## பட்டர்பிளை காந்திமதி அப்ளையன்சஸ் லிமிடெட்

Butterfly celebrating change

CIN No: L28931TN1986PLC012728

**பதிவு அலுவலகம்: 143, புதுப்பாக்கம் கிராமம், வண்டலூர் - கேளம்பாக்கம் ரோடு, கேளம்பாக்கம் - 603 103**

### 31 டிசம்பர், 2025–ல் முடிந்த காலாண்டு/ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை

ரூ. லட்சத்தில்

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஒன்பது மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 31.12.2025 | 30.09.2025 | 31.12.2024 | 31.12.2025 | 31.12.2024 | 31.03.2025 |
| | | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை யானது |
| 1 | செயல்பாடு மூலம் வருமானம் | 24,458.29 | 29,299.43 | 23,824.18 | 72,498.40 | 67,786.49 | 86,503.09 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 1,609.41 | 2,272.48 | 1,152.01 | 4,749.20 | 3,193.71 | 4,394.68 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 1,450.23 | 2,272.48 | 1,152.01 | 4,590.02 | 3,193.71 | 4,394.68 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 1,076.78 | 1,699.69 | 830.57 | 3,419.81 | 2,350.06 | 3,253.31 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது) | 1,132.05 | 1,733.43 | 818.33 | 3,487.69 | 2,312.46 | 3,309.14 |
| 6 | சம பங்கு மூலதனம் | 1,787.96 | 1,787.96 | 1,787.96 | 1,787.96 | 1,787.96 | 1,787.96 |
| 7 | கடந்த ஆண்டு தணிக்கையான பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | பொருந்தாது | பொருந்தாது | பொருந்தாது | பொருந்தாது | பொருந்தாது | 30,659.88 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (ரூபாயில்) காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுடன் முடிந்த காலங்களுக்கான வருடாந்திரம் அல்ல | | | | | | |
| | அ) அடிப்படை | 6.02 | 9.51 | 4.65 | 19.13 | 13.14 | 18.20 |
| | ஆ) பலமிழந்தது | 6.02 | 9.51 | 4.65 | 19.13 | 13.14 | 18.20 |

**குறிப்புகள்**

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சகளில் தாக்கல் செய்யப்பட்ட காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.butterflyindia.comல் உள்ளது.
2. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு நடைமுறைகள் மற்றும் கோட்பாடுகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட கம்பெனிகள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள் 2015ன்படி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இடம் : மும்பை
தேதி : 04.02.2026

இயக்குனர்கள் குழு சார்பாக
**பட்டர்பிளை காந்திமதி அப்ளையன்சஸ் லிமிடெட்**
**காளீஸ்வரன் அருணாச்சலம்**
**இயக்குனர்**

---

## Tamilnadu Petroproducts Limited

Regd.Office: Manali Express Highway, Manali, Chennai 600 068
CIN:L23200TN1984PLC010931 Phone/Fax: No. 044-25945588 / 69185588.
website:www.tnpetro.com Email:secy-legal@tnpetro.com

### EXTRACT FROM THE STATEMENT OF UNAUDITED CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED 31ST DECEMBER 2025

(₹ in lakh)

| Sl.no | Particulars | Consolidated | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended | | | Nine months ended | | Year Ended |
| | | 31-Dec-25 Unaudited | 30-Sep-25 Unaudited | 31-Dec-24 Unaudited | 31-Dec-25 Unaudited | 31-Dec-24 Unaudited | 31-Mar-25 Audited |
| 1. | Total Income | 42,945 | 47,082 | 46,682 | 1,37,088 | 1,39,430 | 1,85,493 |
| 2. | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary items) | 2,614 | 4,551 | 1,700 | 11,929 | 3,634 | 6,007 |
| 3. | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and Extraordinary items) | 2,614 | 4,519 | 1,614 | 11,870 | 4,259 | 7,857 |
| 4. | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary items) | 1,988 | 3,424 | 1,170 | 8,937 | 3,147 | 5,835 |
| 5. | Total Comprehensive Income for the period [Comprising Profit for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 2,178 | 4,113 | 1,537 | 9,796 | 3,615 | 6,321 |
| 6. | Equity Share Capital | 8,997 | 8,997 | 8,997 | 8,997 | 8,997 | 8,997 |
| 7. | Reserves excluding Revaluation Reserve | - | - | - | - | - | 82,191 |
| 8. | Earnings per Share (EPS) (of ₹.10 /- each) (for continuing operations) Basic and Diluted *(Not Annualised) | 2.21* | 3.81* | 1.3* | 9.93* | 3.5* | 6.49 |

**Note:**

1. Additional information on Standalone Financial Results pursuant to proviso to Reg. 47(1)(b)

(₹ in lakh)

| Sl.no | Particulars | Standalone | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended | | | Nine months ended | | Year Ended |
| | | 31-Dec-25 Unaudited | 30-Sep-25 Unaudited | 31-Dec-24 Unaudited | 31-Dec-25 Unaudited | 31-Dec-24 Unaudited | 31-Mar-25 Audited |
| 1. | Total Income | 42,689 | 46,826 | 46,513 | 1,36,342 | 1,38,820 | 1,84,671 |
| 2. | Profit Before Tax | 2,373 | 4,285 | 1,460 | 11,178 | 3,708 | 7,112 |
| 3. | Profit After Tax | 1,764 | 3,207 | 1,031 | 8,293 | 2,651 | 5,142 |
| 4. | Total Comprehensive income after Tax | 1,719 | 3,230 | 1,028 | 8,259 | 2,667 | 5,185 |

2. The above financial results were reviewed and recommended by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on 4th February 2026 and have been subjected to limited review by the Statutory Auditors of the Company. The above results have been prepared in accordance with the Indian Accounting Standards - (Ind AS) as prescribed under Section 133 of the Companies Act 2013, read with Rule 3 of the Companies (Indian Accounting Standards) Rules, 2015 and Companies (Indian Accounting Standards) Amendment Rules, 2016.
3. The Consolidated Financial Results include the results of the Company's wholly owned subsidiary - Certus Investment and Trading Limited, Mauritius and its wholly owned subsidiary - Certus Investment and Trading (S) Private Limited, Singapore on the basis of the consolidated financial statements Limited review by independent auditors of the subsidiary.
4. On November 21, 2025, the Government of India notified the four Labour Codes consolidating 29 existing labour laws. The Company has assessed and disclosed the incremental impact of these changes of ₹ 26.90 lakhs primarily arises due to change in wage definition. The Company continues to monitor the finalisation of Central / State Rules and clarifications from the Government on other aspects of the Labour Code and would provide appropriate accounting effect on the basis of such developments as needed.
5. The above is an extract from the Financial Results for the Quarter and Nine Months Ended 31st December 2025 filed with the Stock Exchanges under Regulation 33 of the of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Standalone and Consolidated Financial Results are available in the website of the Company www.tnpetro.com and the websites of the Stock Exchanges.

**NSE URL -https://nsearchives.nseindia.com/corporate/TPLSECTL_04022026163327_Unauditedresults31dec25.pdf**
**BSE URL -https://www.bseindia.com/xml-data/corpfiling/AttachLive/69d12092-57e3-4e1e-b056-93d173a8ae7f.pdf**

Place : Chennai
Date : 4th February, 2026

**By Order of the Board**
**For Tamilnadu Petroproducts Limited**
**Sd/-**
**D. Senthi Kumar**
**Managing Director**
**(DIN: 00202578)**

---

## சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட்

**(முன்பு மெகாசாப்ட் லிமிடெட்)**

www.sigmaadvsys.com

**பதிவு அலுவலகம்:** எண்.43/1 (# 129 முதல் # 140 வரை), பிரஸ்டீஜ் பல்லேடியம், 8வது தளம், கிரீம்ஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை, 600006, தமிழ்நாடு, இந்தியா. **கார்ப்பரேட் அலுவலகம்:** சர்வே எண் 1/1, மனை எண் 24/A, ஹார்டுவேர் பார்க், ஸ்ரீசைலம் ரோடு, காஞ்சா இமாரத், ரவிராலா கிராமம், மகேஸ்வரம் மண்டலம், ஹைதராபாத், 501510 தெலுங்கானா, இந்தியா.
CIN: L24100TN1999PLC042730, தொலைபேசி: +91-44-24616768, தொலைநகல்: +91-44-24617810,
மின்னஞ்சல்: investors@sigmaadvsys.com

### நிறுவனத்தின் பெயர் மாற்றம் – "மெகாசாப்ட் லிமிடெட்" என்பதிலிருந்து "சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட்" என பெயர் மாற்றம்

நிறுவனங்கள் சட்டம் 2023, பிரிவுகள் 230 –232 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் ("திட்டம்"), மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு, டிசம்பர் 16, 2025 தேதியிட்ட உத்தரவின்படி அனுமதி அளித்ததன்படியும் சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் ("மாற்றும் நிறுவனம்") மற்றும் மெகாசாப்ட் லிமிடெட் ("மாற்றப்பெறும் நிறுவனம்") மற்றும் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடனாளிகளுக்கு இடையிலான இணைப்புத் திட்டம் குறித்து இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இத்தலைப்பிலான முந்தைய தகவல்தொடர்புகளின் தொடர்ச்சியாக, இணைப்புத் திட்டத்தின் படி, "மெகாசாப்ட் லிமிடெட்" என்ற பெயர் "சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட்" என மாற்றப்பட்டுள்ளது என்பதையும், நிறுவனங்களின் பதிவாளர், மத்திய செயலாக்க மையம் (மானேசர்) ஜனவரி 12, 2026 தேதியிட்ட புதிய இணைப்புச் சான்றிதழை வழங்கியுள்ளார் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தொடர்பாக, உங்கள் கனிவான கவனத்திற்கு பின்வருவனவற்றைக் கொண்டு வருகிறோம்:

a. சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் தொடர்ந்து பட்டியலிடப்பட்டு வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
b) பிஎஸ்இ (BSE) லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் (NSE) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட பிப்ரவரி 3, 2026 தேதியிட்ட ஒப்புதல் கடிதங்களின்படி, பெயர் மாற்றத்தைத் தொடர்ந்து, பங்குச் சந்தைகளில் நிறுவனத்தின் வர்த்தக குறியீடு / டிக்கர் புதிய பெயரைப் பிரதிபலிக்கும் வகையில் மாற்றப்படும்.
c) பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ யில் நிறுவனத்தின் வர்த்தகக் குறியீடு பிப்ரவரி 9, 2026 முதல் அமலுக்கு வரும். பிஎஸ்இ மற்றும் என்எஸ்இ –க்கான திருத்தப்பட்ட ஸ்கிரிப் ஐடி / குறியீடு MEGASOFT –லிருந்து SIGMAADV என மாற்றப்படும். நிறுவனத்தின் அனைத்து தொடர்புடைய வரலாற்று தரவுகள் / தகவல்களும் புதிய ஸ்கிரிப் ஐடி / குறியீடான SIGMAADV –ன் கீழ் கிடைக்கும்.

மேற்கண்ட மாற்றத்தை அன்புடன் குறித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். **"சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட்"** என்ற புதிய பெயர், நிறுவனத்தின் அனைத்து எதிர்கால தகவல்தொடர்புகள், ஆண்டு அறிக்கை மற்றும் பிற ஆவணங்களில் பிரதிபலிக்கும்.

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது கூடுதல் உதவி தேவைப்பட்டால், investors@sigmaadvsys.com என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம், நாங்கள் உங்களுக்கு விரைவில் பதிலளிப்போம்.

நன்றி.

**சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் க்காக**
**(முன்பு மெகாசாப்ட் லிமிடெட்)**
**பெயர்: தாக்கூர் விஷால் சிங்**
**நிறுவனச் செயலாளர்**

தேதி: பிப்ரவரி 04, 2026
இடம்: ஹைதராபாத்

---

## பெயர் மாற்றம்

Old Given Name: TEJASWINI OLD Surname: KALLUPOTHULA, பிறந்த தேதி: 19/05/1994, Block –3, Magnus B 1004 10th Floor, Alliance Galleria, Residences Zamin Pallavaram, Pincode - 600117. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name: TEJASWINI New Surname: MADHAVARAM** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: TEJASWINI
OLD Surname: KALLUPOTHULA

## பெயர் மாற்றம்

Old Given Name: SARAVANAN, Old Sur Name: VARADHARAJAN, பிறந்த தேதி: 03.04.1980, No.984, Vaigai Street, Highways Nagar, Villupuram, Pincode– 605602. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name: SARAVANAN, New Surname: VARATHARAJ** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: SARAVANAN,
Old Sur Name: VARADHARAJAN

## பெயர் மாற்றம்

Old Given Name: VARADHARAJAN, Old Sur Name: ....... பிறந்த தேதி: 22.04.1962, No.101, Anna Nagar, Rangasamuthiram, Sathyamangalam, Ariyappampalayam, Erode, Pincode– 638402. முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name: VARATHARAJ, New Sur Name:....** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: VARADHARAJAN, Old Sur Name: .......

## பெயர் மாற்றம்

Old Given Name: Prasanna, W/o.ChandraMouli, Old Surname: Chandra Mouli, பிறந்த தேதி: 20.07.1977, Flat No.C306, S and P Living spaces, S and P Main Road, Kil Ayanambakkam, Vanagaram, Tiruvallur, Pincode-600 095, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name: PRASANNA, New Surname: PASUPATHY** என்று அழைக்கப்படுகிறேன்..

Old Given Name: Prasanna,
Old Surname: Chandra Mouli

## பெயர் மாற்றம்

AFRAAH SULTANA U, தந்தை பெயர்: UBEDULLAH SHERIFF, பிறந்த தேதி: 21/07/2005, 'Zahoor Manzhil' First Floor, No.16/15, Thillai Nayagam 5th Street, Perambur, Sembiam, Chennai – 600 011. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **U. AFRAAH SULTANA** என்று அழைக்கப்படுகிறேன்.

AFRAAH SULTANA U

---

## ஓரியண்ட் க்ரீன் பவர் கம்பெனி லிமிடெட்

பதிவு அலுவலகம்: பாஸ்கான் பியூச்சரா எஸ்வி, 4வது தளம், எண்.10/1, வெங்கடநாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 017. Corporate Identity Number : L40108TN2006PLC061665
Visit us at: https://www.orientgreenpower.com/ E-mail: complianceofficer@orientgreenpower.com

### டிசம்பர் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் அறிக்கை

நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, புதன்கிழமை, பிப்ரவரி 04, 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில், டிசம்பர் 31, 2025 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளை அங்கீகரித்தது.

வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு அறிக்கையுடன் தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகள் நிறுவனத்தின் இணையதளம் https://www.orientgreenpower.com/investor.asp-ல் வெளியிடப்பட்டுள்ளன,

மேலும் QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் அதை பார்க்கலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
**ஓரியண்ட் க்ரீன் பவர் கம்பெனி லிமிடெட்டிற்காக**
**T. ஷிவராமன்**
நிர்வாக இயக்குனர் மற்றும் சிஇஓ

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 04, 2026

**குறிப்பு:** மேற்கண்ட அறிவிப்பு SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதிமுறை 33 மற்றும் விதிமுறை 47 (1)ன்படி உள்ளது.

---

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
**C.M.P.No.22290 of 2025**
**against**
**C.M.P.No.18762 of 2017**
**in**
**S.A.No.55239 of 2017**

K.Pandurangan and another ... Petitioners

Vs

Eswari (Died)
G.Saravanan and others ... Respondents

To,

1. G.Shanthi,W/o. A Babu (R.2) No. 33, Gandhi Road, 3rd Lane, Tiruttani 631 206
2. Indumathi W/o.D. Sivashankar (R.3) No. 33, Gandhi Road, 3rd Lane, Tiruttani 631 206
3. G.Thenmozhi W/o.M. Srinivasan (R.4) No. 33, Gandhi Road, 3rd Lane,Tiruttani 631 206
4. A.Deivayanai W/o. (Late) N. Arumugam (R.5) Perungallathur Village & Post, Arakkonam Taluk,Vellore District
5. A. Lakshmi D/o. (Late) N. Arumugam (R.6) Perungallathur Village & Post,Arakkonam Taluk,Vellore District
6. A.Venkatesan (Late) N.Arumugam (R.7) Perungallathur Village & Post, Arakkonam Taluk. Vellore District
7. P. Palani S/o. (Late) Ponnusamy (R.10) Perungallathur Village & Post, Arakkonam Taluk. Vellore District
8. P. Shanthi D/o. (Late) Ponnusamy (R.11) Perungallathur Village & Post.Arakkonam Taluk. Vellore District
9. P. Samanthi D/o. (Late) Ponnusamy (R.12) Perungallathur Village & Post. Arakkonam Taluk, Vellore District
10. P. Anjugam D/o. (Late) Ponnusamy (R.13) Perungallathur Village & Post, Arakkonam Taluk.Vellore District

Sirs.

Please take notice that the above matter came up before the Hon'ble High Court on 27.01.2026. The Hon'ble High Court, Chennai has permitted us to take notice upon you through paper publication on or before 13.02.2026. Therefore, kindly make arrangemets to appear either in person or through Counsel on or before 13.02.2026 at failing which the matter will be decided in your absence on merits.

For SARVABHAUMAN ASSOCIATES
Counsel for Petitioner

---

## இந்தோ நேஷனல் லிமிடெட்

CIN NO : L31909TN1972PLC006196

பதிவு அலுவலகம்: லட்சுமி பவன், 609, மவுண்ட் ரோடு, சென்னை–600 006.

**31 டிசம்பர் 2025ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தனியான / ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ.லட்சத்தில்)

| விவரங்கள் | தனியானது | | | | | | ஒருங்கிணைந்தது | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | முடிந்த 3 மாதங்கள் | | | முடிந்த 9 மாதங்கள் | | முடிந்த ஆண்டு | முடிந்த 3 மாதங்கள் | | | முடிந்த 9 மாதங்கள் | | முடிந்த ஆண்டு |
| | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்யாதது | தணிக்கை செய்தது |
| | 31/12/2025 | 30/09/2025 | 31/12/2024 | 31/12/2025 | 31/12/2024 | 31/03/2025 | 31/12/2025 | 30/09/2025 | 31/12/2024 | 31/12/2025 | 31/12/2024 | 31/03/2025 |
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 10803.54 | 12062.50 | 12340.34 | 35030.47 | 36705.60 | 46662.50 | 10863.06 | 12115.48 | 12340.33 | 35142.97 | 55713.21 | 65743.86 |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு முன் நிகர லாபம்/(நஷ்டம்) | (722.95) | 308.91 | 27.18 | (239.68) | 307.41 | 106.39 | (846.22) | 150.13 | (1,238.94) | (577.29) | 15,392.98 | 15,129.08 |
| வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (661.95) | 267.91 | 63.18 | (231.68) | 364.41 | 101.39 | (785.22) | 109.13 | (1,207.03) | (569.29) | 12,186.42 | 12,194.61 |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) | (654.35) | 262.06 | 55.18 | (251.68) | 340.41 | 147.89 | (776.83) | 132.64 | (1,215.03) | (563.46) | 12,342.91 | 12,421.60 |
| சமபங்கு மூலதனம் | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 | 375.00 |
| இதர ஈக்விடி | | | | | | 22234.20 | | | | | | 43441.79 |
| பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (அசாதாரண அயிட்டங்களுக்கு முன்/பின்) (ஒன்று ரூ. 5/–) | | | | | | | | | | | | |
| 1. அடிப்படை | (8.83) | 3.57 | 0.84 | (3.09) | 4.86 | 1.35 | (10.46) | 1.85 | (16.09) | (7.25) | 164.91 | 165.02 |
| 2. டைலூட்டட் | (8.83) | 3.57 | 0.84 | (3.09) | 4.86 | 1.35 | (10.46) | 1.85 | (16.09) | (7.25) | 164.91 | 165.02 |

குறிப்பு: SEBI (பட்டியல் மற்றும் இதர வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 31.12.2025–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com, www.nseindia.com மற்றும் எங்கள் கம்பெனியின் இணையதளம் www.nippo.inல் உள்ளது.

இடம் : சென்னை – 600 006
தேதி : பிப்ரவரி 04, 2026

இந்தோ நேஷனல் லிமிடெட்டுக்காக
இணை நிர்வாக இயக்குனர்

**ISO 9001 and ISO 14001 Certified Company**

# நாமக்கல்லில் அதிநவீன பால்பண்ணை; அம்பத்தூரில் ஆராய்ச்சி ஆய்வகம்

## முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை, பிப்.5–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறையின் கீழ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் நாமக்கல் மாவட்டம், லத்துவாடியில் 89.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட அதிநவீன பால்பண்ணை, சென்னை, அம்பத்தூரில் 11.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகம் ஆகிய முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார். மேலும், பால் உற்பத்தியாளர்கள், பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ரூ.1,000 மாதாந்திர கருணை ஓய்வூதியத்தினை வழங்கினார்.

ஆவின் நிறுவனத்தின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்

ஆவின் பால் பதப்படுத்துதல் திறன் அதிகரிக்கவும், விற்பனையை உயர்த்தவும், நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், லத்துவாடியில் 89.28 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட அதிநவீன பால்பண்ணையை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இதன்மூலம் சுமார் 310 கிராமங்களில் உள்ள விவசாயிகளிடமிருந்து நேரடியாக பால் கொள்முதல் செய்யப்படும். மேலும், 58,546 விவசாயிகளுக்கும், 504 மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கும் மற்றும் சுமார் 50 தளவாட வழங்குநர்களுக்கும் மறைமுக வேலைவாய்ப்பை வழங்கும். இம்மாவட்டத்தில் சுமார் 1,22,360 விவசாய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு, சுமார் 150 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும் உருவாகும்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் த.மனோ தங்கராஜ், அரசு தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பால்வளத்துறைச் செயலாளர் என். சுப்பையன், பால்வளத்துறை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் இணை மேலாண்மை இயக்குநர் ச.கவிதா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எச்.ராஜாவை நேரில் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்ததோடு, விரைவில் பூரண நலம்பெற்று வீடு திரும்ப வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் தெரிவித்துக்கொண்டார். இந்நிகழ்வின்போது, கழக துணைப் பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி எம்.எல்.ஏ., கழகப் பொருளாளரும், திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான திண்டுக்கல் சி. சீனிவாசன் எம்.எல்.ஏ., கழக தலைமை நிலையச் செயலாளரும், கோவை புறநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எஸ். பி.வேலுமணி எம்.எல்.ஏ., கழக அமைப்புச் செயலாளரும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான சி.. விஜயபாஸ்கர், எம்.எல்.ஏ., கழக இலக்கிய அணிச் செயலாளரும், கழக செய்தித் தொடர்புச் செயலாளருமான எஸ்.எஸ். வைகைச்செல்வன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

# பொய்ப் புகார் அளித்த நிகிதாவை கைது செய்ய வேண்டும்: அஜித்குமாரின் தாயார் கண்ணீர் பேட்டி

மதுரை, பிப். 5–

சி.பி.ஐ. விசாரணை மேல் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. சிறையில் உள்ளவர்கள் வெளியே வரக்கூடாது என்ற காவலாளி அஜித்குமாரின் தயார் கண்ணீர் மல்க கூறினார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவில் காவலாளி அஜித் குமார் (வயது 28) என்பவரை கடந்த ஜூன் மாதம் நகை திருட்டு புகார் தொடர்பாக தனிப்படை போலீசார் அழைத்துச் சென்று விசாரணை என்ற பெயரில் அடித்து கொலை செய்தனர். இந்த கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

இந்த நிலையில் திருப்புவனத்தில் அஜித்குமாரின் தாயார் மாலதி இன்று பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

எனது மகனை போலீசார் அடித்து கொன்று உள்ளனர். இந்த வழக்கில் எனது மகன் திருடன் இல்லை என்று நீதிபதி கூறியிருப்பது மனதுக்கு சந்தோஷமாக உள்ளது. இருப்பினும் எனது மகன் இறந்ததை தாங்கிக் கொள்ள முடியவில்லை. சம்பவம் நடந்த போது எனது மகனை போலீசார் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்றனர். ஆனால் அது குறித்து எனக்கு எதுவும் தகவல் தெரிவிக்கவில்லை. வீட்டுக்கு வந்த போலீசார் பீரோவை திறந்து அதில் இருந்தவைகளை சோதனை செய்தனர். அப்போது மற்றொரு மகனையும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்றனர். இரவு நீண்ட நேரமாகியும் 2 பேரும் வீட்டுக்கு வரவில்லை. இதனால் எனக்கும் பயம் ஏற்பட்டது. போலீஸ் நிலையத்திற்கு சென்ற போதும் அங்கு என்னை போலீசார் விரட்டி விட்டனர். உறவினர்கள் உள்ளிட்ட பலரிடம் கேட்ட போதும் மகன்களை போலீசார் விசாரித்து விட்டுவிடுவார்கள் என்று கூறினார்கள். அதை நம்பி இருந்த நிலையில் எனது மகனை போலீசார் அடித்து கொன்று உள்ளனர்.

எனது மகன் நகையை எடுத்தது யார் பார்த்தார்கள்? பொய் புகார் அளித்த நிகிதாவை கைது செய்ய வேண்டும். அஜித் குமாரை விசாரிக்க சொல்லி 5 போலீஸ்காரர்களிடம் கூறிய உயர் அதிகாரி, யார்? என்பது எங்களுக்கு தெரியவேண்டும். கஞ்சிக்கு இல்லாவிட்டாலும் வைராக்கியத்துடன் மகன்களை வளர்த்துள்ளேன். ஆனால் நகை திருட்டு பொய் புகாரை கூறி எனது மகனை சாகடித்துள்ளனர். இந்த வழக்கில் போலீசார் எதற்காக எனது மகனை அடித்தார்கள்? யார் அடிக்க சொன்னது? எனது மகனை கொலை செய்து சிறையில் உள்ள 5 போலீஸ்காரர்கள் உட்பட யாரும் வெளியே வரக்கூடாது. சி.பி.ஐ. விசாரணை மேல் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. ஒரு தாய் என்ற உணர்வுடன் நீதிபதி நேற்று இந்த வழக்கில் சில கருத்துக்களை முன் வைத்துள்ளதை உணர்ந்துள்ளேன் என்றார்.

# திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேச பெண்கள் உள்பட 9 பேர் கைது

திருப்பூர், பிப். 5–

திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேச பெண்கள் உள்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

திருப்பூரில் உள்ள பனியன் உள்பட பல்வேறு நிறுவனங்களில், உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக தங்கியிருந்து பணிபுரிந்து வருகின்றனர். இவர்களை கண்டறிந்து கைது செய்ய வேண்டும் என்று போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் உத்தரவிட்டார். இதையடுத்து கியூ பிரிவு போலீசார் தீவிர கண்காணிப்பு மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டு திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வங்க தேசத்தினரை கைது செய்து வருகின்றனர்.

அதன்படி நல்லூர் முஜியாபுரம் பகுதியில் உள்ள பனியன் நிறுவனங்களில், வங்கதேசத்தினர் தங்கியிருந்து வேலை செய்து வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில் போலீசார் சம்பந்தப்பட்ட பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது, வங்க தேசத்தை சேர்ந்த சைபுல் இஸ்லாம் (வயது 26), ரஹதுல்லா (28), மோரியம் (27), ஷாஹ்ரியாலம் (28), தோஹமினா ஆக்டர் (29) மற்றும் 2 பெண்கள் என 9 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்கள் முறையாக ஆவணங்கள் இல்லாமல் சட்டவிரோதமாக தங்கியிருந்து பனியன் நிறுவனங்களில் வேலை செய்து வந்ததும் தெரியவந்தது. மேலும் அவர்களிடம் இருந்த போலி ஆதார் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.



அண்ணா தி.மு.க தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச. இராசேந்திரன் வழிகாட்டுதலின்படி, பம்மல் வடக்கு பகுதி கழகம் சார்பில், பகுதி கழக செயலாளர் வெ. ஜெகநாதன் தலைமையில், அவைத்தலைவர் துரை. தண்டபாணி முன்னிலையில், மாவட்ட கழக துணைச் செயலாளர், முன்னாள் எம்.ல்.ஏ ப. தன்சிங் பொதுமக்களிடம் வழங்கினார். மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் பி.ஆர்.எஸ். சரவணராஜ், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் த. முகுந்தன், பகுதி கழக இணை செயலாளர் கே.ஆர். சுலோச்சனா, எஸ். காசியம்மாள், வட்ட செயலாளர்கள் ஆர். குமரன், வே.ஆ. விநாயகம், அலங்கார் பாஸ்கர், பி.எஸ். சுரேஷ், எஸ். பாபு, டி. சிட்டிபாபு, கே. கனியழகன், இரா. லோகநாதன், டி. ரகுராமன், எம். மூர்த்தி, ஆர். மணிகண்டன், ஆர். சக்கரவர்த்தி, சைதை டி.மணி, எஸ்.சதீஷ் பாலமுருகன், ஜி. அரிகரன், எம். ஐயப்பன், ஆர். வெங்கடேசன், எம்.ஏ. முருகன், வி.கோவிந்தராஜ், ஏ. ஜெயகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


### பெயர் மாற்றம்

MANI ANANDAN, S/O.MANI, பிறந்த தேதி: 02/07/1987, பிறந்த ஊர் : VANDAVASI, TAMIL NADU, NO.318/290, 6TH CROSS STREET DHAMODRAN NAGAR, VYASARPADI, CHENNAI -600039, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MANI ANANDHAN** என்று அழைக்கப்படுகிறேன்.

MANI ANANDAN

### பெயர் மாற்றம்

HITESHIKA GOPINDER PAL WADHAWAN, கணவர் பெயர்: AMIT HANDA, பிறந்த தேதி:: 29/12/1982, 8L RUBY, OLYMPIA SEQUEL, OMR ROAD, NAVALUR,TAMBARAM - 603103. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New GIVEN NAME: HITESHIKA New SURNAME: WADHAWAN** என்று அழைக்கப்படுகிறேன்.

HITESHIKA GOPINDER PAL WADHAWAN

### பெயர் மாற்றம்

POOJA, D/O. SREENIVASAN, பிறந்த தேதி: 20/06/1999, பிறந்த ஊர் : CHENNAI, NO. 36A, SASTHA NAGAR, VALASARAVAKKAM, TAMILNADU, 600087., என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **POOJHA** என்று அழைக்கப்படுகிறேன்.

POOJA

### பெயர் மாற்றம்

OLDSURNAME : KRISHNAMURTHY OLD GIVENNAME : DEEPAK, S/o. Krishnamurthy, பிறந்த தேதி: 20/06/1986, ADDRESS: No.7/3, 3rd Floor, Singarachari Street, Triplicane, Chennai-600005. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New surname: KRISHNAMURTHY New Given name: VIHAN** என்று அழைக்கப்படுகிறேன்.

OLD SURNAME: KRISHNAMURTHY
OLD GIVENNAME : DEEPAK

### பெயர் மாற்றம்

RESHAVU BHANU, W/O : Mohamed Ali Jinna, பிறந்த தேதி:: 10/03/1986, No.829/111, 25th Street, B.V. Colony, Vyasarpadi, CHENNAI- 600039, TN. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி RESHAVU BANU என்று அழைக்கப்படுகிறேன்.

RESHAVU BHANU

### பெயர் மாற்றம்

MUZIB RAHAMAN, தந்தை பெயர்: Yacoob Maricar, பிறந்த தேதி: 18.10.1971, எண்.20/9, மேட்டு தெரு, கொல்லிமலை கீழ்பாதி, லால்பேட்டை, கடலூர், தமிழ்நாடு – 608303, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MUJIBUR RAHAMAN** என்று அழைக்கப்படுகிறேன்.

MUZIB RAHAMAN

### பெயர் மாற்றம்

SANGEETHA DORAIRAJ, D/o. V.S. DURAIRAJ, W/o. V. KARTHICK, No.27/47, Rangadass Colony, 2nd Street, Kolathur, Chennai – 600099. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SANGEETHA DURAIRAJ** என்று அழைக்கப்படுகிறேன்.

SANGEETHA DORAIRAJ

### பெயர் மாற்றம்

எனது மகள், MISHA, பிறந்த தேதி: 17.12.2019, Residing at M–1402, KLP ABHINANDAN APTS, 1–30, 14 PATTALAM, PERAMBUR BARRACKS ROAD, CHENNAI - 600012. என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **MISHA JAIN** என்று அழைக்கப்படுகிறாா்.

AKSHAY KUMAR LALIT KUMAR, தந்தை

### பெயர் மாற்றம்

ARAVIND KHATRI S/O: NANDLAL KHATRI, பிறந்த தேதி: 26/05/1987, 6/7 3RD FLOOR, VENKATAROYAN STREET, PARK TOWN, CHENNAI-600003. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ARVIND N KHATRI** என்று அழைக்கப்படுகிறேன்.

ARAVIND KHATRI

### பெயர் மாற்றம்

PRIYANKA ARVIND KHATRI, W/O. ARVIND N KHATRI, பிறந்த தேதி: 16/05/1989, 6/7 3RD FLOOR, VENKATAROYAN STREET, PARK TOWN, CHENNAI-600003. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PRIYANKA KHATRI** என்று அழைக்கப்படுகிறேன்.

PRIYANKA ARVIND KHATRI

### பெயர் மாற்றம்

AZAHAR MONDAL, தந்தை பெயர்: ABDUL RAHIM MONDAL, பிறந்த தேதி: 18/02/1989, OLD NO 46, NEW NO. 17 2ND FLOOR, 3RD PALLAM STREET, VYASARPADI, CHENNAI 600039. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **AZAHARUDDIN** என்று அழைக்கப்படுகிறேன்.

AZAHAR MONDAL

### பெயர் மாற்றம்

THENGLA BIBI, கணவர் பெயர்: AZAHARUDDI, பிறந்த தேதி: 01/01/1990, OLD NO. 46, NEW NO. 17 2ND FLOOR, 3RD PALLAM STREET, VYASARPADI, CHENNAI 600039. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **TANJILA BIBI** என்று அழைக்கப்படுகிறேன்.

THENGLA BIBI

### பெயர் மாற்றம்

SANKARAN, S/O: RAJAPUSANAM, பிறந்த தேதி: 22.02.1957, ADDRESS: NO.303, KAMARAJ SALAI, RAMAKRISHNA NAGAR, ALWARTHIRUNAGAR, CHENNAI – 600087. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SANKARA NARAYANAN RAJAPUSANAM** என்று அழைக்கப்படுகிறேன்.

SANKARAN

### பெயர் மாற்றம்

MANJUDEVI, W/O: MAHENDAR KUMAR, பிறந்த தேதி: 07.05.1999, NO.24/10, 4TH MAIN ROAD, NANGANALLUR, CHENNAI - 600061. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NEW NAME: M.MANJU** என்று அழைக்கப்படுகிறேன்.

MANJUDEVI

### பெயர் மாற்றம்

KABILAN VASIEKARAN RAJIAH DEIVAMANI, S/O: DEIVAMANI, பிறந்த தேதி: 05.06.1996, ADDRESS: VILLA NO.5A, PLOT NO.5, MIR RAYA ARUN VISHNU VILLA, GANGAI AMMAN KOIL STREET, KARAPAKKAM, CHENNAI – 600097. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **KABILAN VASIEKARAN DEIVAMANI** என்று அழைக்கப்படுகிறேன்.

KABILAN VASIEKARAN RAJIAH DEIVAMANI

### பெயர் மாற்றம்

ZEENATH HUSSAIN KHAN, கணவர் பெயர்: HAJII BASHA, பிறந்த தேதி: 10/03/1974, No.20/1, ASSUDHIN KHAN STREET, TRIPLICANE, CHENNAI – 600 005. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **HAJII BASHA ZEENATH BEGUM** என்று அழைக்கப்படுகிறேன்.

ZEENATH HUSSAIN KHAN

### பெயர் மாற்றம்

OLD SURNAME : ANBALAZAN OLD GIVENNAME : YOKESVARAN , பிறந்த தேதி: 02/06/1981, ADDRESS: 4/414, SEERADI SAIBABA AVENUE, AMBAL NAGAR, KOVUR, CHENNAI-600122. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NEW SURNAME: ANBALAZAN NEW GIVENNAME : YOKESHVARAN** என்று அழைக்கப்படுகிறேன்.

OLD SURNAME : ANBALAZAN
OLD GIVENNAME : YOKESVARAN

### பெயர் மாற்றம்

OLD SURNAME : MURUGAIYAN OLD GIVENNAME : MAHESWARI பிறந்த தேதி: 29/06/1982, 4/414, SEERADI SAIBABA AVENUE, AMBAL NAGAR, KOVUR, CHENNAI-600122. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NEW SURNAME: MURUGAIYAN NEW GIVEN NAME: MAGESHWARI** என்று அழைக்கப்படுகிறேன்.

, OLD SURNAME : MURUGAIYAN
OLD GIVENNAME : MAHESWARI

### பெயர் மாற்றம்

Old Given Name SUBRAMANI Old Surname: :MURUGAN, தந்தை பெயர்: MURUGAN, பிறந்த தேதி: 15/05/1956, NO.161, AMBEDKAR STREET, SENTAMIL NAGAR, ANNANAGAR, PATTABIRAM, CHENNAI- 600072. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name:SUBRAMONEY New Surname: MURUGAN** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name SUBRAMANI
Old Surname: :MURUGAN

### பெயர் மாற்றம்

MAHALAKSHMI VISVANATHAN, கணவர் பெயர்: GOBINATH, பிறந்த தேதி: 27.05.1985, NO.16/9, S1, BLOCK A 2ND FLOOR, CAUVERY SRI KARPAGA APTS, VEDAGIRI STREET, ALANDUR, CHENNAI– 600016. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New GIVEN NAME: MAHALAKSHMI VISVANATHAN New SURNAME: GOBINATH** என்று அழைக்கப்படுகிறேன்.

MAHALAKSHMI VISVANATHAN

### பெயர் மாற்றம்

RITHIK – SUNILKUMAR, தந்தை பெயர்: SUNILKUMAR MEKALA JEEVARATNAM, பிறந்த தேதி: 14/03/2000, No.16/B/21, Kamaraj Street, Sankarampalayam, Vellore – 632001, Tamilnadu. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **HRITHIK KUMAR– MEKALA SUNIL KUMAR** என்று அழைக்கப்படுகிறேன்.

RITHIK – SUNILKUMAR

### பெயர் மாற்றம்

எனது மகள் Old Surname: Mohammed Ali Jinna, Old Given Name: Anees Fathima, பிறந்த தேதி: 20.09.2013, ADDRESS: NO.829, 25th Street, B.V. Colony, Vyasarpadi, Chennai- 600039. TN. என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி New Sur Name : MOHAMED ALI JINNA, New Given Name: ANEES FATHIMA என்று அழைக்கப்படுகிறாா்.

Mohammed Ali Jinna, தந்தை

### பெயர் மாற்றம்

Old Given Name: KADHER MUHIDEEN, Old Surname: SAHUL HAMEED, தந்தை பெயர்: SAHUL HAMEED, பிறந்த தேதி: 10/06/1959, ADDRESS: PLOT NO 230, DOOR NO 8, 1ST FLOOR,1ST STREET, GANAPATHY NAGAR, MADURAVOYAL, CHENNAI - 600095. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name: KADHAR MO HIDEEN, New Surname: SAHUL HAMEED** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Given Name: KADHER MUHIDEEN, Old Surname: SAHUL HAMEED

### பெயர் மாற்றம்

SABYA BEGUM KHAJA MOHAIDEEN, கணவர் பெயர்: KAJA MOHIDEEN, பிறந்த தேதி: 13/06/1963, residing at No.72/29, Srirampet CIT Nagar, Nandhanam, Chennai– 600035. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி Sabya Begum Kaja Mohideen Mohamed Kassim என்று அழைக்கப்படுகிறேன்.

SABYA BEGUM KHAJA MOHAIDEEN

### பெயர் மாற்றம்

R. Lakshmi Pranesh, S/O.S Rajendran , பிறந்ததேதி: 08/11/2004, பிறந்த ஊர்: Chennai Mylapore , F3, No:11, Sasi homes, VV Giri St, Ram Nagar, Ambattur, Chennai 600053, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி R.L.PRANESH. என்று அழைக்கப்படுகிறேன்.

R. Lakshmi Pranesh

### ஆர்க்கியன் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

CIN: L24298TN2009PLC072270

பதிவு அலுவலகம்: எண்.2, வடக்கு கிரசண்ட் ரோடு, தி. நகர், சென்னை 600 017

**31 டிசம்பர், 2025–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூ. லட்சத்தில், ஒரு பங்குத் தரவு தவிர)

| வ. எண். | விவரங்கள் | தனியானது | | | | | | ஒருங்கிணைந்தது | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | டிசம்பர் 31, 2025 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது | செப். 30, 2025 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது | டிசம்பர் 31, 2024 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது | டிசம்பர் 31, 2025 முடிந்த ஒன்பது மாதங்கள் தணிக்கை செய்யாதது | டிசம்பர் 31, 2024 முடிந்த ஒன்பது மாதங்கள் தணிக்கை செய்யாதது | மார்ச் 31, 2025 முடிந்த ஆண்டு தணிக்கை செய்தது | டிசம்பர் 31, 2025 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது | செப். 30, 2025 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது | டிசம்பர் 31, 2024 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது | டிசம்பர் 31, 2025 முடிந்த ஒன்பது மாதங்கள் தணிக்கை செய்யாதது | டிசம்பர் 31, 2024 முடிந்த ஒன்பது மாதங்கள் தணிக்கை செய்யாதது | மார்ச் 31, 2025 முடிந்த ஆண்டு தணிக்கை செய்தது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 26,081.10 | 23,178.14 | 25,466.49 | 78,404.47 | 73,011.16 | 106,344.54 | 26,151.81 | 23,956.17 | 25,114.77 | 80,166.86 | 72,491.84 | 107,830.09 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/ அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 4,574.61 | 5,110.12 | 7,548.35 | 16,836.02 | 21,036.72 | 28,994.95 | 3,332.83 | 3,990.68 | 6,574.97 | 13,124.04 | 18,927.65 | 26,394.96 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 4,574.61 | 5,110.12 | 7,548.35 | 16,836.02 | 17,018.45 | 24,976.68 | 3,332.83 | 3,990.68 | 6,574.97 | 13,124.04 | 14,909.38 | 22,376.69 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 3,430.01 | 3,846.27 | 5,628.69 | 12,461.13 | 12,661.60 | 18,492.34 | 2,399.82 | 2,903.88 | 4,782.28 | 9,318.00 | 10,839.95 | 16,214.49 |
| 5 | காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் (காலத்திற்கான லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானத்தை (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 3,417.02 | 3,835.44 | 5,630.17 | 12,438.98 | 12,651.91 | 18,476.48 | 2,386.83 | 2,894.53 | 4,783.76 | 9,297.33 | 10,830.26 | 16,198.63 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு பங்கு ஒவ்வொன்றும் ரூ.2/–) | 2,469.16 | 2,468.55 | 2,468.55 | 2,469.16 | 2,468.55 | 2,468.55 | 2,469.16 | 2,468.55 | 2,468.55 | 2,469.16 | 2,468.55 | 2,468.55 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | | | | | | 185,545.65 | | | | | | 183,932.77 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.2/–(வருடாந்திரமல்ல) | | | | | | | | | | | | |
| | அடிப்படை | 2.78 | 3.12 | 4.56 | 10.10 | 10.26 | 14.98 | 1.92 | 2.36 | 3.89 | 7.53 | 8.79 | 13.13 |
| | பலமிழந்தது | 2.78 | 3.11 | 4.56 | 10.09 | 10.25 | 14.97 | 1.92 | 2.36 | 3.88 | 7.53 | 8.79 | 13.12 |

குறிப்பு
1. டிசம்பர் 31,2025–ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பிப்ரவரி 04, 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
2. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை, SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 திருத்தப்பட்டது, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள டிசம்பர் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும், டிசம்பர் 31, 2025–ல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் பங்குச் சந்தைகளின் இணையதளம் (www.nseindia.com மற்றும் www.bseindia.com) நிறுவனத்தின் இணையதளம் (www.archeanchemicals.com)–ல் கிடைக்கிறது.

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 4, 2026

இயக்குனர்கள் குழு உத்தரவுப்படி
ஆர்க்கியன் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ராம்பிரவீன் சுவாமிநாதன்
நிர்வாக இயக்குனர்
DIN : 01300682

### 9வது உதவி மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை
E.P.No. 2079 of 2025

K. ரங்கராஜன் ...மனுதாரர்/தீர்ப்பணை பெற்றவர்
எதிர்
N. அங்குபிரகாஷ் ..........எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

பெறுநர்,
N. அங்குபிரகாஷ்,
எண்.89, 2வது தளம், காயிதே மில்லத் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை–600 005.
...எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி

மேற்கண்ட மனுதாரர், E.P.No. 2079/2025 என்னும் மனுவை, எண்.89, 2வது தளம், காயிதே மில்லத் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை –600 005 முகவரியில் உள்ள மனு அட்டவணையில் உள்ள அசையும் சொத்துக்களை ஜப்தி செய்வதற்காக தாக்கல் செய்துள்ளார். மேற்சொன்ன மனுவானது, மாண்புமிகு 9வது உதவி மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை முன்பு, 22.01.2026 அன்று விசாரணைக்கு வந்து தங்கள் வருகைக்காக 12.02.2026 அன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே 12.02.2026 அன்று காலை 10.30 மணிக்கு மேற்சொன்ன நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி மேற்சொன்ன மனுவிற்கு ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் அம்மனுவானது தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

K. லவன்
மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்
வழக்குரைஞர்

### ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within THREE months thereafter, I, VASANDHARAJA, S/O. VASUDEVAN, DOB. 29.03.2002, Address. 38, North Street, Ramanathspuram Manakkollai Post, Aladi Virudhachalam Taluk, pincode: 606115, Cuddalore Dist, Tamil nadu. intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**VASANDHARAJA**

### ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within THREE months thereafter, I, NIVETHA R, D/O RENGANATHAN, Age: 22 years, DOB: 23.03.2003, Address: NO 13 Mullai Nagar, 1st Street, Virudhachalam –606001. intend having my enrollment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.
Those who have any valid objections may notify the same to the Bar Council within ten days.

**NIVETHA R**

## துணைவேந்தர் நியமன விவகாரம்

# தமிழக அரசின் சட்டத்துக்கு ஐகோர்ட் விதித்த தடை ரத்து: சுப்ரீம் கோர்ட் அதிரடி

புதுடெல்லி, பிப்.5–

பல்கலைக்கழக துணை வேந்தர்களை அரசே நியமிக்கும் என்ற தமிழக அரசின் சட்டத்துக்கு ஐகோர்ட் தடை விதித்து இருந்தது. இந்த தடையை சுப்ரீம் கோர்ட்டு ரத்து செய்து அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழக பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை கவர்னரிடம் இருந்து மாநில அரசுக்கு மாற்றும் செய்ய சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த சட்டத்திருத்த மசோதா உள்பட 10 சட்ட மசோதாக்கள் கடந்த 2022 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டன.

இதற்கு கவர்னர் ஒப்புதல் அளிக்காத நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட், 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளித்து உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து துணை வேந்தர்களை அரசே நியமிக்கும் திருத்த சட்டம் அமலுக்கு வந்தது. இந்த திருத்த சட்டம் தமிழக அரசு அரசிதழிலும் வெளியிடப்பட்டது.

இந்த சட்டத்தை எதிர்த்து நெல்லையை சேர்ந்த வக்கீல் வெங்கடாசலபதி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட், தமிழக பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தரை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கி இயற்றப்பட்ட சட்டத்துக்கு இடைக்கால தடை விதித்து கடந்த ஆண்டு மே 21ந் தேதி உத்தரவிட்டது. இந்த தடை உத்தரவுக்கு எதிராக தமிழ்நாடு அரசின் சார்பில் வக்கீல் மிஷா ரோத்தகி சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த மனு தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அரசின் சார்பில் மூத்த வக்கீல்கள் பி.வில்சன், அபிஷேக் மனு சிங்வி ஆஜராகி, 'சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்த மனுதாரர் வெங்கடாசலபதி நெல்லையைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் ஐகோர்ட் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்யாமல், சென்னை ஐகோர்ட் விடுமுறை அமர்வில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் வாதங்களை கேட்காமலேயே மைக்கை ஆப் செய்துவிட்டு வழக்கை விசாரித்த நீதிபதிகள், தமிழ்நாடு அரசுக்கு எதிராக சில கருத்துகளை தெரிவித்து இடைக்கால தடையை பிறப்பித்தனர்.

இது, நீதிமன்ற வரலாற்றில் எப்போதும் நடக்காத ஒன்றாகும். நீதிமன்றத்தின் இந்த செயல் நியாயமற்றது. எனவே, ஐகோர்ட் பிறப்பித்த இடைக்கால தடையை ரத்து செய்ய வேண்டும்' என வாதிட்டனர்.

வெங்கடாசல பதி சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் டி.எஸ்.நாயுடு, 'இந்த நீதிமன்றத்தின் மீது பழி சுமத்துவது நியாயமற்றது' என வாதாடினார்.

அப்போது நீதிபதிகள், 'இந்த விவகாரம் தொடர்புடைய மனு நிலுவையில் இருக்கும் போது ஏன் விடுமுறை கால அமர்வில் அவசரமாக விசாரிக்கப்பட்டது. துணைவேந்தர் நியமன சட்டத்தின் செல்லுபடி தன்மையை விடுமுறை அமர்வு விசாரிப்பது சரியா? அதுவும் விசாரித்து இடைக்கால தடை பிறப்பிக்கும் அளவுக்கு இந்த விவகாரத்தில் என்ன அவசரம் நேர்ந்தது?' என கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்த மூத்த வக்கீல் டி.எஸ்.நாயுடு, 'துணைவேந்தர் நியமனங்களை மாநில அரசு துரிதப்படுத்தியதால் இந்த மனு அவசரமாக விசாரிக்கப் பட்டது' என்றார். அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி, 'சட்ட விரோதமாக துணை வேந்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் ஐகோர்ட் தலையிட்டு இருக்க முடியும்' என கருத்து தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட சுப்ரீம் கோர்ட், தமிழக பல்கலைக் கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கி இயற்றப்பட்ட சட்டத்துக்கு இடைக்கால தடை விதித்த சென்னை ஐகோர்ட்டின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டது.

மேலும், 'இந்த விவகாரம் தொடர்புடைய மனுவை சென்னை ஐகோர்ட் மீண்டும் விசாரிக்க வேண்டும். இந்த மனுவை தொடர்ந்து விசாரித்து 6 வாரங்களுக்குள் இறுதி உத்தரவை பிறப்பிக்க வேண்டும்.

சென்னை ஐகோர்ட்டு இந்த விவகாரத்தில் தெரிவித்த கருத்துகள் நீக்கப்படுகிறது' என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# தூத்துக்குடி துறைமுகத்தின் ரூ.15 ஆயிரம் கோடி விரிவாக்க திட்ட ஒப்பந்தம்: மத்திய அமைச்சர் முன்னிலையில் கையெழுத்து

தூத்துக்குடி, பிப்.5

**தூத்துக்குடி துறைமுகத்தின் ரூ.15 ஆயிரம் கோடி விரிவாக்க திட்டத்திற்கான ஒப்பந்தம் மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் முன்னிலையில் கையெழுத்தானது.**




தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் ரூ.15 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் வெளித்துறைமுக அமைக்க திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான நிதி ஏற்பாடு செய்வதற்காக இந்திய ரெயில்வே நிதிக்கழகம் மற்றும் சாகர்மாலா நிதிக் கழகம் ஆகியவற்றுடன் வ.உ.சி. துறைமுக ஆணையம் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து உள்ளது.

புதுடெல்லியில் உள்ள மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகத்தில் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் முன்னிலையில், வ.உ.சி. துறைமுக ஆணையம் சார்பில் அதன் தலைவர் சுசாந்த குமார் புரோகித், இந்திய ரெயில்வே நிதிக்கழகம் லிமிடெட் நிர்வாக இயக்குனரும், தலைவருமான மனோஜ் குமார் டுபெய், சாகர்மாலா நிதிக்கழகம் லிமிடெட் நிர்வாக இயக்குனர் எல்.வி.எஸ்.சுதாகர் பாபு ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

நிகழ்ச்சியில் மத்திய ரெயில்வே, தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து துறை இணை அமைச்சர் சாந்தனு தாக்கூர், துறை செயலர் விஜய் குமார் மற்றும் அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தம் நிதி அமைப்பை வடிவமைத்தல், நிதி ஆதாரங்களை அடையாளம் காணுதல், திட்ட செயலாக்கம், திறன் மேம்பாடு மற்றும் அறிவுப் பகிர்வு போன்றவற்றை நோக்கமாக கொண்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் துறைமுகத்தில் அலை தடுப்புச்சுவர் கட்டுமானம், ஆழப்படுத்தும் பணிகள், நில மீட்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற துணை பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதேபோன்று மத்திய அரசின் 'ஆத்மநிர்பர் பாரத்' முயற்சியின் கீழ் உருவாக்கப்பட்ட கூட்டு நிறுவனமான பாரத சரக்குப் பெட்டக கப்பல் சேவை நிறுவனத்தில் பங்குதாரராக சேருவதற்கான மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வ.உ.சி. துறைமுக ஆணையம் கையெழுத்திட்டு உள்ளது.

துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிறுவன மானது ஏற்றுமதி, இறக்குமதி, உள்நாட்டு கடல்சார் வர்த்தகத்துக்காக கப்பல்கள், சரக்குப்பெட்டகங்கள் மற்றும் தொடர்புடைய சொத்துகளை வாங்குதல், நிர்வகித்தல் மற்றும் வாடகைக்கு விடுதல் போன்ற செயல்பாடுகளுக்காக உருவாக்கப் பட்டு உள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், 2026–27 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட கண்டெய்னர் உற்பத்தி உதவி திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது.


## பொது அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது என்னவெனில், 88,000 TPA அளவிலான ரீ-ரோலிங் தயாரிப்புகள் / கட்டமைப்பு எஃகு & TMT கம்பிகள் மற்றும் 91,000 TPA அளவிலான MS பில்லெட்டுகள் உற்பத்திக்காக முன்மொழியப்பட்ட எஃகு உருக்காலை மற்றும் ரோலிங் மில் விரிவாக்கத் திட்டம்,

Plot No. B27 (N) (M) (S), SIPCOT தொழில்துறை வளாகம், பெட்டிக்குப்பம் & பழைய கும்மிடிப்பூண்டி கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு 601201 இல் அமைந்துள்ள அலகிற்கு,

தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA), தமிழ்நாடு மூலம் சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட சுற்றுச்சூழல் அனுமதியின் நகல்கள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) அலுவலகங்களில் பார்வையிடக் கிடைக்கின்றன. மேலும், அவை தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA), தமிழ்நாடு இணையதளத்திலும் காணலாம். https://parivesh.nic.in/newupgrade/#/proposal-summary/proposal-document?proposal=119471458&proposal_no=SIA%2FTN%2FIND1%2F522835%2F2025&proposal_id=119471457

இடம் : கும்மிடிப்பூண்டி
தேதி : 12/01/2026 இப்படிக்கு
M/s. கனிஷ்க் ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கும்மிடிப்பூண்டி

## பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

BAJAJ FINANCE

**பதிவு அலுவலகம்:** பஜாஜ் ஆட்டோ லிமிடெட், அகுர்டி, புனே 411035.
**கிளை அலுவலகம்:** யூனிட் எண். 804, 805, & 806, டெல்டா விங், 8வது தளம், ரஹேஜா டவர்ஸ், எண். 177, அண்ணா சாலை, சென்னை 600 002
**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விவரங்கள்:** பெயர்: ஜின்சி ஜான்,
மின்னஞ்சல் முகவரி: jincy.john@bajajfinserv.in மொபைல் எண் +91 98995 72847

**பிற்சேர்க்கை IV A [விதி 8 (6)க்கான விதியைப் பார்க்கவும்]**
**SARFAESI சட்டம் 2002ன் கீழ் மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**
**நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் கீழ் ('சட்டம்') அசையா சொத்துக்கள் விற்பனை**

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டில் ("BFL') அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்துக்கள் மற்றும் சட்டத்தின் விதிகளின் கீழ் BFLன் கீழ் கையொப்பமிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டவை, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் மேலும் பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை மீட்டெடுப்பதற்காக ஏலத்தின் மூலம் விற்கப்படும் என்று பொது மக்களுக்கும், கடன்தாரர்கள்/உடன் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கீழே விவரிக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்து, நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகளின் ("விதிமுறைகள்") விதி எண். 8 & 9ன் கீழ், "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே, எந்தவித மாற்றமும் இல்லாமல்" விற்கப்படுகிறது.

**மின்னணு ஏலம் குறித்த விவரங்கள்**

| | |
|---|---|
| கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி | ராமுடு செட்டி ஜெயக்குமார் (கடன்தாரர்) புதிய எண்.5, ஏரிக்கரை தெரு, நெற்குன்றம், சென்னை 600107 மற்றும் எண்.8/34, வெங்கடேஸ்வரா நகர், 2வது பகுதி, 3வது தெரு, கொடுங்கையூர், சென்னை 600118. |
| கடன் கணக்கு எண் | 403CSH10902474 / 403CSH10988361 |
| 13(2) ன் கீழ் சட்டப்பூர்வ கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை | 19 ஏப்ரல் 2017 தேதியிட்ட அறிவிப்பு கோரப்பட்ட தொகை ₹2,64,68,407/ – |
| 30.01.2026 அன்று நிலுவைத் தொகை | **ரூ. 4,14,70,956.62/ – (ரூபாய் நான்கு கோடியே பதினான்கு லட்சத்து எழுபதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தாறு மற்றும் அறுபத்திரண்டு பைசா மட்டும்)** |
| அசையாச் சொத்தின் விவரம் | **சொத்து எண் 1:** சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம், சனதி நிகேதன் லேஅவுட், மனை எண் 20, ஒக்கியம் துரைப்பாக்கம் கிராமம், சர்வே எண்கள் 406/3A/1A மற்றும் 406/3A/1B–ல் அடங்கிய, மொத்தமுள்ள 2400 சதுர அடியில், 1200 சதுர அடி பிரிக்கப்படாத நிலத்தில், 536 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பாகத்துடன் "PB"S ஸ்ருதி என அழைக்கப்படும் கட்டிடத்தில், முதல் தளத்தில், 1050 சதுர அடி (பொது இடங்கள் உட்பட) பரப்பளவு கொண்ட பிளாட் எண் F–1 மற்றும் F–1 என குறிப்பிடப்பட்ட கார் பார்க்கிங் ஆகியவை. இதன் எல்லைகள்: வடக்கே: மனை எண் 21; தெற்கே: மனை எண் 19; கிழக்கே: 20 அடி சாலை; மேற்கே: மனை எண் 17. **சொத்து எண் 2:** சென்னை, ஷெனாய் நகர், முருகேசன் தெரு, கதவு எண் 8/14, பிளாக் எண் 17, R.S.எண் 287, புதிய R.S.எண் 287/23–ல் அடங்கிய, மொத்தமுள்ள 2415 சதுர அடியில், 1207.5 சதுர அடியில், 376 சதுர அடி பிரிக்கப்படாத நிலப் பாகத்துடன் "P.B'S அட்டையர் என அழைக்கப்படும் கட்டிடத்தில், முதல் தளத்தில், 800 சதுர அடி பரப்பளவு கொண்ட பிளாட் எண் F–3 மற்றும் ஒரு கார் பார்க்கிங் ஆகியவை. இதன் எல்லைகள்: வடக்கே: திரு. C.M. ஆனந்தமூர்த்தி அவர்களுக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம்; தெற்கே: திருமதி. குப்பம்மாள் அவர்களுக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம்; கிழக்கே: C.P. முருகேசன் [illegible] |
| ரிசர்வ் விலை ரூ. | சொத்து எண் 1: ₹54,36,000/- சொத்து எண் 2: ₹87,50,000/- |
| EMD | சொத்து எண் 1: ₹5,43,600/- சொத்து எண் 2: ₹8,75,000/- |
| மின் ஏலம் தேதி & நேரம் | சொத்து எண் 1: 21/02/2026 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை; சொத்து எண் 2: 21/02/2026 அன்று மதியம் 03:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை |
| மின்னணு ஏல இணையதளம் | https://bankauctions.in |
| EMD சமர்ப்பிக்க கடைசி தேதி | 20/02/2026 |
| ஏல அதிகரிப்பு தொகை | ₹50,000/- [illegible] |
| ஈடுபெற்ற கடன் வழங்குநருக்கு தெரிந்த கடமைகள் | இல்லை |
| சொத்து ஆய்வு தேதி | 05/02/2026 முதல் 19/02/2026 [illegible] |

[illegible]
தேதி: 05/02/2026 ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இடம்: சென்னை பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

## isarc இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

பதிவு அலுவலகம்: தி ரூபி, 11வது தளம், வட மேற்குப் பிரிவு, மனை எண் 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை – 400028.

### சுவாதீனம் அறிவிப்பு

**[சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002–ன் விதி 8(1)]**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடமானதாரர்கள் பெட்பேங்க் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டில் ("ஆரம்பத்தில் கடன் வழங்கியவர்") இருந்து நிதி உதவியைப் பெற்றுள்ளனர். மேற்கூறிய கடன், அதனுடன் தொடர்புடைய அனைத்துப் பிணையப் பாதுகாப்பு உரிமைகள் மற்றும் அசல் ஆரம்பத்தில் கடன் வழங்கியவரின் அனைத்து உரிமைகள், பாத்தியதை மற்றும் நலன்களுடன் சேர்த்து, SARFAESI சட்டம், 2002–ன் விதிகளின் கீழ், செப்டம்பர் 26, 2025ஆம் தேதியிட்ட உரிமை மாற்ற ஒப்பந்தத்தின் மூலம், ISARC–2025–2026–3 டிரஸ்டின் அறங்காவலராகச் செயல்படும் **இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டிற்கு** ("ISARC") ஆரம்பத்தில் கடன் வழங்கியவரால் உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

அதேசமயம், 2002 ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002 ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதி 3–ன் விதிமுறைக்கு இணங்கவும், **இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டின்** ("ISARC") கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள்/ அடமானதாரர்களான **1) ஸ்ரீ சென்னம்மாள் டிராவல்ஸ், 2) கவிதா ஏ, 3) ஆறுமுகம் கே** ஆகியோருக்கு அனுப்பிய 28-10-2025 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருந்தபடி செலுத்த வேண்டிய தொகை **ரூ.24,82,267.14 (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து எண்பத்திரெண்டாயிரத்து இருநூற்றுஅறுபத்தியேழு மற்றும் பதினான்கு பைசா மட்டும்)** மற்றும் அறிவிப்பில் கண்டுள்ள வட்டி தொகை ஆகியவற்றை மேற்சொன்ன நோட்டீஸ் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடமானதாரர்களுக்கு வழங்கப்பட்ட மேற்கண்ட அறிவிப்பில் கண்டுள்ள முழு தொகை, கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணங்களை திரும்ப செலுத்தத் தவறியதால், அவர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை 2002 ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டத்தின் 13(4) பிரிவின் கீழும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும் **02 பிப்ரவரி 2026** அன்று **அடையாள சுவாதீனம்** எடுத்துக் கொண்டார்.

சட்டத்தின் 13வது பிரிவின் துணைப் பிரிவு (8)ன் கீழ் ஈடுபெற்ற சொத்துக்களை மீட்பதற்காக, போதிய கால அவகாசம் உள்ளதால் அதை மீட்டுக்கொள்ள கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடமானதாரர்களுக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

**இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டிற்கு** ("ISARC") திரும்ப செலுத்த வேண்டிய தொகை **ரூ.27,28,784/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து எழுநூற்று எண்பத்து நான்கு மட்டும்)** மற்றும் வட்டி தொகைக்கும் இந்த சொத்து ஈடாக இருப்பதால், இந்த சொத்தில் யாரும் எந்தவித டீலிங்குகளையோ, பரிவர்த்தனைகளையோ வைத்துக் கொள்ளக்கூடாது என்று கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுகிறது.

**அசையா சொத்தின் விவரம்**

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, குன்றத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே எண் 1292 ல் அடங்கிய, "ஸ்ரீபூபால விநாயகர் நகர் எக்ஸ்டென்ஷன்" என்று அழைக்கப்படும் லேஅவுட்டில் உள்ள, மனை எண்கள் 50 & 51 ல், கட்டிடத்துடன் கூடிய, மொத்தம் 2925 சதுர அடி நிலத்தில், 1200 சதுர அடி அளவுள்ள நிலம்.இதன் அளவுகள் : வடக்கு பக்கம் (கிழக்கு மேற்காக): 30 அடி, தெற்கு பக்கம் (கிழக்கு மேற்காக): 30 அடி, கிழக்கு பக்கம் (வடக்கு தெற்காக): 40 அடி, மேற்கு பக்கம் (வடக்கு தெற்காக): 40 அடி, இதன் எல்லைகள் (நான்கு மால்) பின்வருமாறு:வடக்கே: ஜெகதீசனின் மனை, கிழக்கே: கால்வாய், தெற்கே: 16 அடி சாலை, மேற்கே: மீதமுள்ள நிலம். அளவுகள் சுருக்கம் : வடக்கு பக்கம்: 30 அடி, தெற்கு பக்கம்: 30 அடி, கிழக்கு பக்கம்: 40 அடி, மேற்கு பக்கம்: 40 அடி.

**இடம் : சென்னை** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**தேதி : 02.02.2026** **இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்**

## AUTHUM ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

**பதிவு அலுவலகம்: 707, ரஹேஜா சென்டர், ப்ரீ பிரஸ் ஜர்னல் சாலை, நாரிமன் பாயிண்ட், மும்பை 400 021**Ph.: (022) 6747 2117 Fax: (022) 6747 2118 E-mail: info@authum.com

### சுவாதீனம் அறிவிப்பு

**[சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002–ன் விதி 8(1)]**

கீழே கையொப்பமிடப்பட்ட ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டின் ("AIIL") அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (10.05.2024 தேதியிட்ட NCLT உத்தரவின்படி, ரிலையன்ஸ் கமர்ஷியல் பைனான்ஸ் லிமிடெட் ("RCFL") இலிருந்து AIIL க்கு கடன் வழங்கும் வணிகத்தை பிரித்ததன் விளைவாக), 2002 ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2) வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002 ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதி 3–ன் விதிமுறைக்கு இணங்கவும், **1) பார்த்தசாரதி எஸ், 2) டெப்பினிதாபிரெட் பி,** கடன் கணக்கு எண். **RLHLCHE000101698–** ன் கீழ் அனுப்பிய **21 நவம்பர் 2025** தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருந்தபடி செலுத்த வேண்டிய தொகை ரூ.**2,04,01,144/-** (ரூபாய் இரண்டு கோடியே நான்கு லட்சத்து ஓராயிரத்து நூற்று நாற்பத்து நான்கு மட்டும்) மற்றும் அறிவிப்பில் கண்டுள்ள வட்டி தொகை ஆகியவற்றை மேற்சொன்ன நோட்டீஸ் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்களுக்கு வழங்கப்பட்ட மேற்கண்ட அறிவிப்பில் கண்டுள்ள முழு தொகை, கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணங்களை திரும்ப செலுத்தத் தவறியதால், கடன்தாரர்கள், உடன் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4)வது பிரிவின் கீழும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும் **04 பிப்ரவரி 2026** அன்று **அடையாள சுவாதீனம்** எடுத்துக் கொண்டார்.

**ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்டிற்கு 31–01–2026** அன்று வரை திரும்ப செலுத்த வேண்டிய தொகை **ரூ.2,08,16,272/ – (ரூபாய் இரண்டு கோடியே எட்டு லட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று எழுபத்திரண்டு மட்டும்)** மற்றும் வட்டி தொகைக்கும் இந்த சொத்து ஈடாக இருப்பதால், இந்த சொத்தில் யாரும் எந்தவித டீலிங்குகளையோ, பரிவர்த்தனைகளையோ வைத்துக் கொள்ளக்கூடாது என்று கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுகிறது. சட்டத்தின் 13வது பிரிவின் துணைப் பிரிவு (8)ன் கீழ் ஈடுபெற்ற சொத்துக்களை மீட்பதற்காக, போதிய கால அவகாசம் உள்ளதால் அதை மீட்டுக்கொள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

**அசையா சொத்தின் விவரம்**

காலி நிலம் மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.20, எஸ்எம்எஸ் நகர், எண்:4 ஊரப்பாக்கம் கிராமம் செங்கல்பட்டு தாலுக்கா காஞ்சிபுரம் மாவட்டம், சர்வே எண்.:113/1A பகுதி 114/1A பகுதி 114/3 பகுதி, விஸ்தீரணம் 2310 சதுர அடி. எல்லைகள்: வடக்கு: மனை எண்: 21, தெற்கு: மனை எண்: 19, கிழக்கு : 30 அடி அகல சாலை மற்றும், மேற்கு: தனியார் நிலம்.
விஸ்தீரணம் கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் : 70 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் : 70 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் : 33 அடி மற்றும் வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் 33 அடி.
அட்டவணை ' B' : பிரிவுபடாத பங்கு நிலம் 430 சதுர அடி மற்றும் கார் பார்க்கிங் 32 சதுர அடி மொத்தம் 462 சதுர அடி. அட்டவணை ' A' சொத்து,
அட்டவணை 'C' : பிளாட் எண்.ஜி 1, தரை தளம், 1001 சதுர அடி விவரக்குறிப்புகளின்படி பொதுப் பகுதியையும் உள்ளடக்கியது.

**இடம் : சென்னை** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**தேதி : 04.02.2026** **ஆத்தம் இன்வெஸ்ட்மென்ட் & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்**

## CENTRUM Home Loans

கார்ப்பரேட் & பதிவு அலுவலகம்: யூனிட் எண்.801, சென்ட்ரம் ஹவுஸ், சிஎஸ்டி சாலை, வித்யாநகரி மார்க், கலினா சாந்தாகுரூஸ் (கிழக்கு), மும்பை 400 098. CIN : U65922MH2016PLC273826

### கோரிக்கை அறிவிப்பு

[illegible]

| வ. எண். | கடன் கணக்கு எண்/ கடன்தாரர்/ உடன் கடன்தாரர்/ உத்தரவாததாரர் | மொத்த நிலுவைத் தொகை ரூ. | என்பிஏ தேதி/ பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு/ FCL தேதி | ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம் (அசையா சொத்து) |
|---|---|---|---|---|
| 1 | MAAMA24018221/ [illegible] | ரூ.25,88,955.00 [illegible] | 08-01-2026 27-01-2026 24-01-2026 | [illegible] |

[illegible]
இடம்: தமிழ்நாடு, தேதி : 05.02.2026 ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

## பெயர் மாற்றம்

கவுஸ் முகமது இம்ரான் த/பெ முகமது கவுஸ், பிறந்த தேதி 18/07/1969, பிறந்த மாவட்டம் சென்னை, விலாசம் 7/3, காத்தபடா, 2வது குறுக்கு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு - 600021, என்ற விலாசத்தில் வசிக்கும் நான், இனி SURNAME கவுஸ், GIVEN NAME முகமது இம்ரான் என்று அழைக்கப்படுகிறேன்.

கவுஸ் முகமது இம்ரான்
(GHOUSE MOHMED IMRAN)

## BHARTIYA பாரதியா இன்டர்நேஷனல் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 56/7, நல்லம்பாக்கம் கிராமம், (வண்டலூர் வழி), சென்னை 600 127. தமிழ்நாடு
CIN-L74899TN1987PLC111744 |
தொலைபேசி: 91 9551050418-21
மின்னஞ்சல்: shares@bhartiya.com |
இணையதளம்: www.bhartiya.com

### அறிவிப்பு

செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிமுறைகள், 2015 ன் விதிமுறை 29 மற்றும் 47 ன் படி, 31 டிசம்பர் 2025 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளைப் பரிசீலித்து ஒப்புதல் அளிக்க, நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுக் கூட்டம் புதன்கிழமை, 11 பிப்ரவரி 2026 அன்று நடைபெற உள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணைய தளமான www.bhartiya.com–லும், பங்குச் சந்தை இணையதளங்களான www.nseindia.com மற்றும் www.bseindia.com ஆகியவற்றிலும் அணுகலாம்.

**பாரதியா இன்டர்நேஷனல் லிமிடெட்டிற்காக**
**ஒம்/–**
**தேதி:** 04.02.2026 **யோகேஷ் குமார் கௌதம்**
**இடம்:** குருகிராம் **(நிறுவனச் செயலாளர்)**

## பொது அறிவிப்பு

இதன்மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், சென்னை–600 001, கொண்டிதோப்பு, 4th லைன், சுந்தரம் வீதி, எண்.6/19 என்ற விலாசத்தில் வசித்து வரும் D.S. ரமேஷ் ஆகிய எனக்கு சொந்தமான அசல் ஆவண எண்.4078/2011, சர்வே எண்.316/1, ஸ்ரீ ராஜேஸ்வரி நகர். மனை 676001.41, விஸ்தீரணம் 1500 சதுர அடி, வேலூர் மாவட்டம். அரக்கோணம் வாலாஜா பதிவு வன்னிவேடு மதுரா வட்டம், மாவட்டம், வன்னிவேடு மோட்டூர் கிராம எல்லைக்குட்பட்டது. பத்திரம் பதிவு செய்யப்பட்ட தேதி 23.05.2011. மேற்படி பத்திரம் காணாமல் போய்விட்டது. மேற்படி பத்திரத்தை யாரேனும் கிடைக்கப் பெற்றால் மேற்படி எனது முகவரிக்கு தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**D.S. ரமேஷ்**
**(ஆதார் எண். 5560 3225 1563)**
**கைப்பேசி: 93823 23456**

IN THE COURT OF DISTRICT MUSIF CUM JUDICIAL MAGISTRATE AT SHOLINGANALLUR
EP. No. 23 of 2025
in
O.S.No. 4704 of 2024

Mr. Ashwin. Y, Son of Mr. Y.S. Anand,
No.3, Perumal Koil Street,
Kotturpuram, Chennai-600085
..... Petitioner/Decree Holder /Plaintiff
Vs
1) M/s. Gaia Consulting and Solution Pvt Limited
Represented by its Director,
No.39, 2nd floor, 1st Link Road,
Nehru Nagar OMR, Kottivakkam,
Chennai-600041
2) Mrs. Evangeline Regina Samson Jacob, W/o Late Samson Jacob
No.4, West End, Ground floor,
Fern land 103, Erikarai Road,
Perungudi, Chennai-600096
.... Respondents/ Judgment Debtors/ Defendants

To
Mrs. Evangeline Regina Samson Jacob,
W/o Late Samson Jacob
No.4, West End, Ground floor,
Fern land 103, Erikarai Road,
Perungudi, Chennai-600096

Please take notice that the Execution Petition in EP. No. 23 of 2025 had come up for hearing on 04.02.2026 before the Hon'ble DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT AT SHOLINGANALLUR and the Hon'ble Judge was pleased to order notice to you through paper publication. The above case is now posted to 10.03.2026. Kindly make yourself available before the Hon'ble DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT AT SHOLINGANALLUR either personally or through your counsel on 10.03.2026. at 10 am, to show cause your interest in the same, failing which the matter may be decided Exparte in your absence

Praveen Alexander
Counsel for Petitioner/
Decree Holder

## டிவிஎஸ் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்

TVSE TVS ELECTRONICS

Corporate Identity Number : L30007TN1995PLC032941
பதிவு அலுவலகம் : ஹரிதா டவர்ஸ், 2வது தளம், எண்.119, செயின்ட் மேரீஸ் சாலை, அபிராமபுரம், சென்னை 600 018
மின்னஞ்சல் : webmaster@tvs-e.in இணையதளம் : www.tvs-e.in

### பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

**காகித வடிவிலான பங்குகளுக்கான பரிமாற்ற கோரிக்கைகளை மீண்டும் தாக்கல் செய்வதற்கான சிறப்பு சாளரம்**

நான் C.அப்துல் சமது ஆகிய எனது கீழ்க்கண்ட சொத்தின் அசல் பத்திரம் காணாமல் போய்விட்டது. எங்கு தேடியும் கிடைக்கப்பெறவில்லை. யாரேனும் கிடைக்கப்பெற்றால் கீழ்க்கண்ட என்னுடைய வீட்டு முகவரிக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த காணாமல் போன அசல் பத்திரத்தை வைத்து யாரேனும் வில்லங்கமோ, அடமானமோ, உரிமையோ கோர வேண்டாம் என கேட்டுக் கொள்கிறோம். அப்படிச் செய்தால் அது சட்டப்படி செல்லாது என்றும் அந்த சொத்தின் மீது யாருக்கும் உரிமை இல்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறோம். சொத்தின் விபரம்: முந்தைய பழைய கதவு எண்.10, பழைய கதவு எண்.33, புதிய கதவு எண்.28, மாதா சர்ச் தெரு, ராயபுரம், சென்னை – 600 013, சர்வே நம்பர் R.S.No.194, C.C.No.219, விஸ்தீர்ணம் 3200 சதுர அடி ஆகும். வடக்கே: காலி நிலம் R.S.No.193 (அந்தோணி முத்துப்பிள்ளை வீடு), தெற்கே: R.S.No. 197 (ஆரோக்கியசாமி பிள்ளை வீடு), மேற்கே: R.S.Nos.195/A மற்றும் 195/2 (சின்னையா வீடு) மற்றும் கிழக்கே: R.S.No.217 (மாதா சர்ச் தெரு), சென்னை – செங்கல்பட்டு பத்திரப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. வடசென்னை பத்திரப்பதிவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த சொத்தை எனது தகப்பனார் 16.5.1951ம் ஆண்டு வடசென்னை சார்பதிவகத்தில் அசல் பத்திரம் எண்.1697/1951 படி பதிவு செய்யப்பட்டது. எனது வழக்கறிஞரை இந்தச்சொத்து சம்பந்தமாக சந்திக்கச் சென்ற போது 25.8.2016 அன்று, ரட்டன் பஜார்–NSC Bose Road வளைவில் உள்ள C–1 பிளவர் பஜார் போலீஸ் ஸ்டேசன் அருகில் அசல் பத்திரம் எண்.1697/1951 நாள் 16.05.1951 வடசென்னை சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டது.

**C.அப்துல் சமது,**
**த/பெ.லேட்.ஹாஜி முகம்மது குட்டி,**
**எண்.28, மாதா சர்ச் தெரு,**
**ராயபுரம், சென்னை – 600 013.**

**படிவம்-A பொது அறிவிப்பு**

நொடித்தல் மற்றும் இந்திய திவால் வாரிய (திவால் நிலை தீர்மான நடைமுறை) விதிமுறைகள் 2017–ன் விதி 6ன் கீழ்

**EPI SOURCE INDIA PRIVATE LIMITED நிறுவனத்தின் கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு**

| | தொடர்புடைய விளக்கங்கள் | |
|---|---|---|
| 1 | நிறுவன கடனாளர் பெயர் | EPI SOURCE INDIA PRIVATE LIMITED |
| 2 | நிறுவன கடனாளர் இணைக்கப்பட்ட தேதி | 27-05-2004 |
| 3 | அதிகாரத்தின் கீழ் நிறுவன கடனாளர் இணைப்பு / பதிவு | நிறுவனங்கள் பதிவாளர் அலுவலகம்–சென்னை |
| 4 | நிறுவன கடனாளரின் நிறுவன அடையாள எண்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண். | U72900TN2004PTC053347 |
| 5 | நிறுவன கடனாளரின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதாவது இருந்தால்) | நெ.18, சத்யநாராயணா அவென்யூ, போட் கிளப் ரோடு, சென்னை-600028 தமிழ்நாடு |
| 6 | நிறுவன கடனாளிகளைப் பொறுத்தவரை திவால் நிலை தொடக்க தேதி | 03-02-2026 |
| 7 | இடைக்காலத் தீர்மான நிபுணராகச் செயல்படும் தீர்மான நிலை நிபுணரின் பெயர், முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண் | பெயர் : திரு. அனந்தாச்சாரி மகேஷ் முகவரி : 5/5, ஐஸ்வர்யாஸ் எசோதாம்மை அப்பார்ட்மெண்ட்ஸ், 5, மாதவ மணி அவென்யு, வேளச்சேரி, சென்னை-600042. மின்னஞ்சல்: episourceindiaclaims@gmail.com; பதிவு எண் : IBBI/IPA-001/IP-P 01723/ 2019-2020/12673 தொலைபேசி எண் : 9566124770 |
| 8 | கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 04-03-2026 |

EPI Source India Private Limited–ன் பெருநிறுவன திவால்நிலை தீர்மான செயல்முறையை பிப்ரவரி 3, 2026 அன்று தொடங்க உத்திரவிட்டுள்ளதாக இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

EPI Source India Private Limited–ன் கடன் வழங்கியவர்கள், 4-3-2026 அன்று அல்லது அதற்கு முன்னர், வரிசை எண், 7க்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள இடைக்காலத் தீர்மான நிபுணரிடம் தங்கள் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் சமர்ப்பிக்குமாறு இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் தங்கள் உரிமைகோரல்களை மின்னணு முறையில் மட்டுமே ஆதாரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்கியவர்களும் நேரில், தபால் அல்லது மின்னணு முறையில் ஆதாரத்துடன் உரிமைகோரல்களைச் சமர்ப்பிக்கலாம்.

தவறான அல்லது தவறாக கோரிக்கை ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

ஒப்பம்
திரு. **அனந்தாச்சாரி மகேஷ்**
Liquidator of **EPI SOURCE INDIA PRIVATE LIMITED**
IP Reg. IBBI/IPA-001/IP-P-01723/2019-2020/12673

நாள் : 05-02-2026
இடம் : சென்னை

படிவம் எண். RSC-4
[தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் (நிறுவனத்தின் பங்கு மூலதனக் குறைப்பிற்கான நடைமுறை) விதிகள், 2016-ன் விதி 3(3)-ன் படி]
தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் முன்பாக சென்னை அமர்வு (நீதிமன்றம் எண். II)
நிறுவன மனு எண் CP/2(CHE)/2026
அறிவிப்பு
நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 66 மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் விஷயத்தில்
மற்றும்
வேவின் இந்தியா லிமிடெட்டின் சம பங்கு மூலதனத்தைக் குறைப்பது தொடர்பான விஷயத்தில்
**வேவின் இந்தியா லிமிடெட்**
(CIN: U25209TN1964PLC005274)
பதிவு அலுவலகம்: மனை எண்கள் 65 & 66, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-600058
**அறிவிப்பு விளம்பரம்**

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், மேற்கண்ட நிறுவனத்தின் பங்கு மூலதனத்தை, தலா ரூ. 10/- (ரூபாய் பத்து மட்டும்) மதிப்புள்ள 49,99,900 (நாற்பத்து ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) பங்குகளைக் கொண்ட ரூ.4,99,99,000/-லிருந்து (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்று ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரம் மட்டும்), தலா ரூ. 1/- (ரூபாய் ஒன்று மட்டும்) மதிப்புள்ள 49,99,900 (நாற்பத்து ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) பங்குகளைக் கொண்ட ரூ.49,99,900/- ஆக (ரூபாய் நாற்பத்து ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) குறைப்பதை உறுதி செய்ய, ஜனவரி 21, 2026 அன்று மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் ("தீர்ப்பாயம்"), சென்னை அமர்வில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. இக்குறைப்பானது, நிறுவனத்தின் தற்போதுள்ள அனைத்து சம பங்குகளின் முகமதிப்பை ரூ.10/- லிருந்து ரூ.1/- ஆகக் குறைப்பதன் மூலமும், நிறுவனத்தால் இதற்காக எந்தவிதத் தொகையும் செலுத்தப்படாமலும் மேற்கொள்ளப்படுகிறது.

தனிப்பட்ட கடன் வழங்கியவர்களுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. 22 டிசம்பர் 2025 அன்று நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கடன் வழங்கியவர்களின் பட்டியல், நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திலும் மற்றும் மனை எண்கள் 65 & 66, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600058, இந்தியா என்ற முகவரியிலும் கிடைக்கிறது. இந்த அறிவிப்பு தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்கு, திங்கள் முதல் வெள்ளி வரை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இதனைப் பார்வையிடலாம்.

நிறுவனத்தின் கடன் வழங்கியவர்கள் எவருக்கேனும் இந்த விண்ணப்பம் மீதோ அல்லது கடன் வழங்கியவர்கள் பட்டியலில் உள்ள விவரங்கள் மீதோ ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், அதனை (ஆதார ஆவணங்களுடன்) மற்றும் அவரது பெயர், முகவரி மற்றும் அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி (ஏதேனும் இருப்பின்) பெயர் மற்றும் முகவரி ஆகிய விவரங்களுடன் தீர்ப்பாயத்திற்கு அனுப்பலாம். அதே சமயம், ஆட்சேபனைகளை இந்த அறிவிப்பு தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், கீழே கையொப்பமிட்டவரிடமோ அல்லது நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திலோ சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் எந்த ஆட்சேபனையும் பெறப்படாவிட்டால், கடன் வழங்கியவர்களின் பட்டியலில் உள்ள பதிவுகள், நிறுவனத்தின் பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான மேற்கண்ட மனுவின் கீழ் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளிலும் சரியானதாகக் கருதப்படும்.

விண்ணப்பத்தின் மீதான விசாரணை தேதியாக, புதன்கிழமை, **18.03.2026** அன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதையும், அந்தத் தேதியில் தீர்ப்பாயம் விண்ணப்பத்தை விசாரிக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். கடன் வழங்கியவர்கள் எவரேனும் விசாரணையில் கலந்துகொள்ள விரும்பினால், அவர் தனது ஆட்சேபனைகளுடன் (ஏதேனும் இருப்பின்) அது குறித்த கோரிக்கையைத் தெரிவிக்க வேண்டும்.

**வேவின் இந்தியா லிமிடெட்டிற்காக**
பிரிஜ் கிஷோர் நந்தன்
இயக்குநர்
DIN: 02409988
பிளாட் எண். 156/1, D-12, செக்டார் - 7, ரோகிணி, டெல்லி – 110085

**தேதி: 05.02.2026**
**இடம்: சென்னை**

## 'ரெட் லேபிள்' படத்தின் சினிமாக் கலைஞர்கள் அறிமுக விழா

# டிக்கெட்டுக்கு தரும் ரூ.120ல் 120 குடும்பங்கள் பிழைக்கும்

## அனுபவம் பேசும் கதாசிரியர் பொன். பார்த்திபன்

சென்னை, பிப். 5–

''இப்போதெல்லாம் கதாநாயக நடிகர்கள் தான் கதையையும் படத்தின் காட்சிகளையும் முடிவு செய்கிறார்கள். ஷாட் என்ன என்பதைக் கூட அவர்கள்தான் முடிவு செய்கிறார்கள். அப்படி எல்லாவற்றிலும் மூக்கை நுழைத்து சுயநலமாக இருக்கிறார்கள். அவர்கள் அந்த சுயநலத்தை விட்டு விடுங்கள்'' என்று 40 ஆண்டு அனுபவசாலி பிரபல நடிகர் – இயக்குனர் அனுமோகன் (நினைவுச் சின்னம், இது ஒரு தொடர்கதை, மேட்டுப்பட்டி மிராசு) அன்பு விடவேண்டும். வேண்டுகோள் விடுத்தார்.

'ரெட் லேபிள்' படத்தை கே .ஆர். வினோத் இயக்கியுள்ளார். ரெவ்ஜென் பிலிம் பேக்டரி சார்பில் லெனின் தயாரித்துள்ளார், கதை பொன். பார்த்திபன், சதீஷ் மெய்யப்பன் ஒளிப்பதிவு, கைலாஷ் மேனன் – இசை லாரன்ஸ் கிஷோர் – படத்தொகுப்பு.

நாயகனாக லெனின், நாயகியாக அஸ்மின், இவர்களுடன் முக்கியமான கதாபாத்திரத்தில் இயக்குநர் ஆர். வி. உதயகுமார், கௌரவ வேடத்தில் முனிஷ்காந்த் மற்றும் இயக்குநர் அனுமோகன் தருண், கெவின், கார்மேகம் சசி, அனுஷா நடித்துள்ளனர்.

நாளை (6ந் தேதி) வெளியாக இருக்கும் இந்த 'ரெட் லேபிள்' படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு பிரசாத் லேபில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் லெனின் பேசும் போது, முதலில் 2023ல் கதை தேர்வானது, கதை பிடித்து விட்டது. ஆனால் எந்தப் படம் வந்தாலும் நமது படத்தில் உள்ள காட்சிகள் இருப்பது போல் தோன்றியது. அதனால் போன ஆண்டில் வந்த அனைத்து படங்களையும் பார்த்து விட்டேன். வாரம் எட்டு படம் வருகிறது. எல்லாவற்றிலும் நாங்கள் நினைத்தது வந்தது போலவே தோன்றும். இருந்தாலும் கதை வலுவாக இருந்ததால் தைரியமாக இருந்தோம் என்று கூறினார்.

'நான் படப்பிடிப்பில் கேட்கிற அளவுக்கெல்லாம் வசதிகள் செய்து கொடுக்கமாட்டேன். ஒரு காட்சியில் 10 நாற்காலிகள் வேண்டுமென்றால் ஐந்து தான் கொடுப்பேன். இப்படித்தான் நான் தேவையற்ற செலவுகளைக் குறைத்துக் கொண்டு மிச்சப்படுத்தினேன் என்றும் அனுபவம் பேசினார்.

''சினிமாவில் ஒரு தயாரிப்பாளர் செலவு செய்வது அனைத்தும் செலவுக் கணக்கில் தெரியுமா என்றால் தெரியாது.ஒ ரு படத்திற்கு 5 கோடி செலவு செய்கிறார்கள் என்றால் பத்திலிருந்து பதினைந்து சதவீதம் செலவில் வராது.கமிஷனாகப் போய் விடுகிறது இது வேதனைக்குரியது.

ஷங்கர் சார், லஞ்சத்தை ஒழிப்பதற்குப் படம் எடுத்தது மாதிரி இதையும் ஒழிக்க ஒருபடம் எடுக்க வேண்டும் என்று ஆதங்கத்தோடு கூறினார்.




### படம் பார்ப்பது இளைஞர்கள் மட்டுமே

கதாசிரியர் பொன். பார்த்திபன் பேசும் போது,"இந்தப் படக்கதையைப் படமாக எடுக்கும் போது முதலில் எதெல்லாம் வேண்டாம் என்று முடிவு எடுத்து தவிர்க்க வேண்டியவற்றையெல்லாம் தவிர்த்தோம் .ஆனால் ஆதாரமாக இருக்கும் ஒருவரியை மட்டும் அதன் பொறியை அக்கினி குஞ்சு இருப்பது போல் அதன் தன்மை மாறாமல் பார்த்துக் கொண்டோம்'' என்றார்.


''சினிமா டிக்கெட்டுக்கு 120 ரூபாய் கொடுத்தால் அந்த பணத்தில் தான் 120 குடும்பங்கள் பிழைக்கின்றன'' என்றார்.

படத்தை வெளியிடும் ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் குகன் பேசும்போது, "இப்போது வரும் பார்வையாளர்கள் யார் என்றால் 15 முதல் 32 வயது வரை உள்ளவர்கள் தான். இவர்களே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்து எது அவர்களைத் தூண்டுகிறதோ அந்தக் கதைகள் ஓடுகின்றன. பிறகு தான் வாய் வழியாக பேசப்பட்டு மற்றவர்கள் உள்ளே நுழைகிறார்கள்'' என்றார்.

''முதல் 10 கதாநாயகர்களுக்கு ரசிகர்கள் இருக்கிறார்கள். அதையும் தாண்டி கதை உள்ள படங்கள் ஓடத்தான் செய்கின்றன. எனவே கதை என்பதை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அடுத்து பாடல்கள் முக்கியம். ரீ ரிலீஸ் படங்கள் எல்லாம் பாடல்களால்தான் பேசப்படுகின்றன .எனவே பாடல்களுக்கு ஓர் இடம் உள்ளது'' என்றார்.

### தங்கக் காசு பரிசு

நிகழ்ச்சியில் இயக்குனர் கே.ஆர். வினோத், இசையமைப்பாளர் கைலாஷ்மேனன், பாடலாசிரியர் மோகன் ராஜன், கதாநாயகி அஸ்மின் ஆகியோர் பேசினார்கள். படத்தின் மக்கள் தொடர்பாளர், ஸ்ரீதர் ராஜூ, உதய், ஹரிபாபு மூவரின் பணியைப் பாராட்டி அவர்களுக்கு தயாரிப்பாளர் – ஹீரோ லெனின், தங்கக் காசுப் பரிசளித்தார்.




# இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் ரத்த தான முகாம்

சென்னை, பிப் 5–

இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (படூர்) சென்னை ஸ்பாட்லைட் ரோட்டரி கிளப், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், ரெட் ரிப்பன் கிளப், தேசிய சேவைத் திட்டம் மற்றும் விஎச்எஸ்எஸ் மருத்துவமனை ஆகியவற்றுடன் இணைந்து 'ஒரு சொட்டு உயிர்' என்ற ரத்த தான முகாமை ஏற்பாடு செய்தது.

இந்த முகாமை இயக்குநர் டாக்டர். சூசன் வர்கீஸ் (நிர்வாகச் செயல் அதிகாரி) டேவிட் ரியான் (துணை இயக்குநர்) டாக்டர். வி.ஜே. பிலிப் (முதல்வர்) டாக்டர். உத்திரா டி மற்றும் துணை முதல்வர் டாக்டர். கே. மலர்விழி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்த உன்னத நோக்கத்திற்கு ஆதரவளிக்க 90க்கும் மேற்பட்ட மாணவர்கள் தாமாக முன்வந்து ரத்த தானம் செய்தனர்.

இந்த நிகழ்வில் பேசிய ஒருங்கிணைப்பாளர், என்எஸ்எஸ் திட்ட அதிகாரி மற்றும் நிர்வாக விவகாரங்களுக்கான தலைவர் டாக்டர். எல். கிருஷ்ணசாமி, கூட்டுப் பொறுப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

மேலும், இதுபோன்ற உன்னத முயற்சிகள் மூலம் மனிதாபிமான சேவையை வலுப்படுத்துவதில் மாணவர் தன்னார்வலர்கள் எவ்வாறு முக்கியப் பங்கு வகிக்கிறார்கள் என்பதையும் எடுத்துரைத்தார்.

இந்த முகாம் ரத்த தானத்தின் உயிர் காக்கும் தாக்கம் குறித்து வெற்றிகரமாக விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன், மாணவர் சமூகத்தினரிடையே உள்ள கருணை மற்றும் ஒற்றுமையின் உணர்வுக்கு ஒரு சான்றாகவும் விளங்கியது.


## W.S. இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

CIN: L42909TN1961PLC004568

பதிவு அலுவலகம்: 3வது தளம், புதிய எண்.48, பழைய எண்.21, சவிதானு பில்டிங், காசா மேஜர் சாலை, எழும்பூர், சென்னை 600 008.

### பொது அறிவிப்பு

**காகித வடிவிலான பங்குகளின் பரிமாற்றம் மற்றும் மின்னணு வடிவ பங்குகளாக மாற்றும் சிறப்பு சாளரம்**

SEBI சுற்றறிக்கை எண் HO/38/13/11(2)2026–MIRSD–POD/I/3750/2026, தேதி **30.01.2026–ன்படி**, 01.04.2019க்கு முன்பு காகித வடிவிலான (Physical) பங்குகளை வாங்கிய/விற்ற முதலீட்டாளர்களுக்காக, பங்குகளை பரிமாற்றம் செய்து மின்னணு வடிவ பங்குகளாக மாற்றும் ஒரு **சிறப்பு சாளரம்** 05.02.2026 **முதல்** 04.02.2027 **வரை** திறக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆவணங்கள்/செயல்முறை/அல்லது வேறு ஏதேனும் குறைபாடு காரணமாக நிராகரிக்கப்பட்ட / திருப்பி அனுப்பப்பட்ட / செயல்படுத்தப்படாத விண்ணப்பங்களுக்கும் இந்த சாளரம் பொருந்தும்.

**முதலீட்டாளர்கள் / பங்குதாரர்களுக்கான முக்கிய குறிப்புகள்:**

1. தகுதியான முதலீட்டாளர்கள், குறிப்பிடப்பட்ட ஒரு வருட காலப்பகுதியில் தங்களின் காகித வடிவிலான பங்கு பரிமாற்றம் மற்றும் டிமாட் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் / மீண்டும் சமர்ப்பிக்கலாம்.
2. தேவையான சரிபார்ப்புகளுக்குப் பிறகு, அனைத்து பங்குகளும் **மின்னணு (Demat) வடிவில் மட்டுமே** வழங்கப்படும் மற்றும் பரிமாற்ற பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து **ஒரு வருட முடக்க நிலை (lock–in)** காலத்திற்கு உட்பட்டிருக்கும்.
3. விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்காக, முதலீட்டாளர்கள் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (RTA) தொடர்பு கொள்ள வேண்டும்.

**பதிவாளர் & பங்கு பரிமாற்ற முகவர் (RTA):**

**M/s. Integrated Registry Management Services Private Limited**

2வது மாடி, கென்சஸ் டவர்ஸ், எண்.1,
இராமகிருஷ்ணா தெரு, வட உஸ்மான் ரோடு,
டி. நகர், சென்னை – 600 017
தொடர்பு எண்: 044 – 2814 0801 / 02 / 03
மின்னஞ்சல்: corpserv@integratedindia.in

முதலீட்டாளர்கள், குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலதிக விவரங்களுக்கு **www.sebi.gov.in** இணையதளத்தில் **'Legal → Circulars'** பகுதியில் மற்றும் **www.wsindustries.in** இணையதளத்தில் **'Investors → Announcements → Special Window for Transfer and Dematerialisation of Physical Securities – SEBI Circular dated January 30, 2026 (Bi-monthly Disclosure)'** உள்ள SEBI சுற்றறிக்கையை பார்க்கலாம் அல்லது எங்கள் RTA–வை தொடர்பு கொள்ளலாம்.

**W.S. Industries (India) Limited சார்பாக**
Sd/–

இடம்: சென்னை
தேதி: 05.02.2026

**வெ. பாலமுருகன்**
நிறுவனச் செயலாளர்



## கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்

Kothari SUGARS AND CHEMICALS LTD

**பதிவு அலுவலகம்: "கோத்தாரி பில்டிங்ஸ்" எண்.**115, **மஹாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை** - 600 034.
CIN : L15421TN1960PLC004310 Phone No. 044-35225526 / 35225529
Email: secdept@hckgroup.com Website: www.hckotharigroup.com/kscl

### 31.12.2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் நடப்புக் காலத்திற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, பிப்ரவரி 04, 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில், டிசம்பர் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் நடப்பு காலத்திற்கான நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு அறிக்கையுடன் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளையும் அங்கீகரித்தது.

தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள், மற்றும் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு அறிக்கை நிறுவனத்தின் இணையதளத்தில் **https://hckotharigroup.com/kscl/?q=node/22 (Path: www.hckotharigroup.com/kscl/investors/quarterly-results)** மற்றும் பங்குச் சந்தையின் இணையதளமான **www.nseindia.com**-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் நிதிநிலை முடிவுகளை பார்வையிடலாம்.

கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்டுக்காக

இடம் : சென்னை
நாள் : 04.02.2026

**அர்ஜுன் B. கோத்தாரி**
நிர்வாக இயக்குநர்
DIN : 07117816

**குறிப்பு :**
மேற்கண்ட அறிவிப்பு, SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33 மற்றும் விதி 47(1)ன் படி உள்ளது.



APTUS®

## Aptus Value Housing Finance India Ltd.

**(CIN : L65922TN2009PLC073881)**

**Registered Office and Corporate Office :** 8B, 8th Floor, Doshi Towers, 205, Poonamallee High Road, Kilpauk, Chennai - 600 010. **Tel:** +91 44 4565 0000

### STATEMENT OF UNAUDITED CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER & NINE MONTHS ENDED DECEMBER 31, 2025

(Rs. in lakhs)

| S. No. | Particulars | Consolidated | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended | | Nine months ended | | Year ended |
| | | 31.12.2025 | 31.12.2024 | 31.12.2025 | 31.12.2024 | 31.03.2025 |
| 1 | Total Income from Operations | 55,359.95 | 45,004.51 | 161,790.02 | 126,637.18 | 175,040.87 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | 30,378.40 | 24,553.26 | 88,359.24 | 70,387.80 | 97,483.89 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary items) | 30,378.40 | 24,553.26 | 88,359.24 | 70,387.80 | 97,483.89 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and / or Extraordinary items) | 23,618.86 * | 19,050.49 | 68,198.90 * | 54,422.08 | 75,124.61 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 23,620.52 | 19,051.46 | 68,202.82 | 54,426.26 | 75,123.26 |
| 6 | Paid up Equity Share Capital | 10,013.20 | 9,996.28 | 10,013.20 | 9,996.28 | 9,996.28 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) | 469,655.06 | 400,835.10 | 469,655.06 | 400,835.10 | 421,668.90 |
| 8 | Securities Premium Account | 178,971.90 | 176,563.30 | 178,971.90 | 176,563.30 | 176,972.65 |
| 9 | Net worth | 479,669.51 | 410,831.38 | 479,669.51 | 410,831.38 | 431,665.18 |
| 10 | Paid up Debt Capital/ Outstanding Debt | 751,349.40 | 643,498.23 | 751,349.40 | 643,498.23 | 684,684.25 |
| 11 | Outstanding Redeemable Preference Shares | - | - | - | - | - |
| 12 | Debt Equity Ratio | 1.57 | 1.57 | 1.57 | 1.57 | 1.59 |
| 13 | Earnings Per Share (of Rs. 2/- each)<br>1. Basic (Not annualised for the quarter and nine months)<br>2. Diluted (Not annualised for the quarter and nine months) | <br>4.72<br>4.72 | <br>3.82<br>3.81 | <br>13.64<br>13.63 | <br>10.90<br>10.89 | <br>15.04<br>15.01 |

* Including additional cost on account of New labour code, Past service cost of Rs.385.00 lakhs (Rs.299.00 lakhs net of tax)

**Notes:**

1. The above statement of unaudited consolidated results has been approved by the Board of directors on Feb 04, 2026.
2. The financial statements have been prepared in accordance with the Ind AS notified under the Companies (Indian Accounting Standards) Rules, 2015 as amended.

### STATEMENT OF UNAUDITED STANDALONE FINANCIAL RESULTS FOR THE QUARTER & NINE MONTHS ENDED DECEMBER 31, 2025

(Rs. in lakhs)

| S. No. | Particulars | Standalone | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended | | Nine months ended | | Year ended |
| | | 31.12.2025 | 31.12.2024 | 31.12.2025 | 31.12.2024 | 31.03.2025 |
| 1 | Total Income from Operations | 37,027.78 | 32,907.15 | 110,692.19 | 94,167.17 | 129,403.41 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary items) | 20,114.31 | 17,996.40 | 65,143.41 | 51,761.28 | 73,720.19 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary items) | 20,114.31 | 17,996.40 | 65,143.41 | 51,761.28 | 73,720.19 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and / or Extraordinary items) | 15,981.64 * | 14,175.20 | 51,639.99 * | 40,580.88 | 57,544.36 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 15,982.77 | 14,176.17 | 51,643.38 | 40,585.06 | 57,542.07 |
| 6 | Paid up Equity Share Capital | 10,013.20 | 9,996.28 | 10,013.20 | 9,996.28 | 9,996.28 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) | 399,517.40 | 350,996.79 | 399,517.40 | 350,996.79 | 368,090.68 |
| 8 | Securities Premium Account | 178,971.90 | 176,563.30 | 178,971.90 | 176,563.30 | 176,972.65 |
| 9 | Net worth | 409,531.85 | 360,993.07 | 409,531.85 | 360,993.07 | 378,086.96 |
| 10 | Paid up Debt Capital/ Outstanding Debt | 497,296.03 | 485,402.97 | 497,296.03 | 485,402.97 | 482,866.65 |
| 11 | Outstanding Redeemable Preference Shares | - | - | - | - | - |
| 12 | Debt Equity Ratio | 1.21 | 1.34 | 1.21 | 1.34 | 1.28 |
| 13 | Earnings Per Share (of Rs. 2/- each)<br>1. Basic (Not annualised for the quarter and nine months)<br>2. Diluted (Not annualised for the quarter and nine months) | <br>3.19<br>3.19 | <br>2.84<br>2.84 | <br>10.32<br>10.32 | <br>8.13<br>8.12 | <br>11.52<br>11.50 |

* Including additional cost on account of New labour code, Past service cost of Rs.385.00 lakhs (Rs.299.00 lakhs net of tax)

**Notes:**

1. The above is an extract of the detailed format of financial results filed for the quarter & nine months ended December 31, 2025 which had been approved by the Board of directors on Feb 04, 2026 and subjected to a limited review by the Statutory auditors for the nine months ended Dec 31, 2025 and filed with the Stock Exchanges under Regulation 33 and 52 of the SEBI (Listing Obligations and Other Disclosure Requirements) Regulations, 2015, as amended. The full format of the aforesaid financial results is available on the website of the Company (www.aptusindia.com), BSE limited (www.bseindia.com), and National Stock Exchange of India Limited (www.nseindia.com).
2. The financial statements have been prepared in accordance with the Ind AS notified under the Companies (Indian Accounting Standards) Rules, 2015 as amended.
3. Amounts for the comparative periods presented have been reclassified / regrouped, wherever necessary.

Scan code for Full Results

**On behalf of the Board of Directors**
**M Anandan**
**Executive Chairman**
**DIN 00033633**

**Place : Chennai**
**Date : February 4, 2026**

**visit us at www.aptusindia.com**



## ரெடிங்டன் லிமிடெட்

Redington

பதிவு அலுவலகம் : பிளாக் 3, பிளத்தின், ரெடிங்டன் டவர், உள்வட்ட சாலை, மேற்கு சரஸ்வதி நகர், 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600 091
வலைதளம்: www.redingtongroup.com | மின்-அஞ்சல்: investors@redingtongroup.com
CIN: L52599TN1961PLCO28758
தொலைபேசி எண்: +91-44-4224 3363

**டிசம்பர் 31, 2025 - உடன் முடிந்த காலாண்டு / ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாதது ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை**

ரூ. கோடிகளில்

| வ. எண் | விவரங்கள் | ஒருங்கிணைந்தவை | | | |
|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த ஒன்பது மாதங்கள் | முடிந்த ஆண்டு |
| | | டிசம்பர் 31, 2025 | டிசம்பர் 31, 2024 | டிசம்பர் 31, 2025 | மார்ச் 31, 2025 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1. | செயல்பாடுகள் மூலம் இருந்து மொத்த வருமானம் | 30,921.73 | 26,716.08 | 85,949.33 | 99,333.65 |
| 2. | வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு முன் லாபம் | 537.78 | 512.88 | 1,301.87 | 1,709.04 |
| 3. | வரிக்கு முன் லாபம் | 537.78 | 512.88 | 1,301.87 | 2,334.81 |
| 4. | வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு பின் லாபம் | 413.39 | 402.96 | 996.57 | 1,820.62 |
| 5. | விரிவான மொத்த வருவாய் | 455.06 | 475.04 | 1,185.32 | 1,819.94 |
| 6. | பங்கு மூலதன மதிப்பு | 156.35 | 156.35 | 156.35 | 156.35 |
| 7. | இருப்புகள் மற்றும் உபரி (கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு தவிர மற்ற பங்கு) | 9,162.90 | 7,751.90 | 9,162.90 | 8,388.57 |
| 8. | கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு | 176.12 | 176.12 | 176.12 | 176.12 |
| 9. | மொத்த நிதி சொத்துக்கள் | 9,495.37 | 8,084.37 | 9,495.37 | 8,721.04 |
| 10. | கட்டுப்படுத்தாத வட்டி | 355.61 | 251.21 | 355.61 | 476.16 |
| 11. | நிலுவையில் உள்ள கடன் | 2,170.74 | 3,314.11 | 2,170.74 | 2,619.18 |
| 12. | கடன்-பங்கு விகிதம் | 0.22 | 0.40 | 0.22 | 0.28 |
| 13. | ஒரு பங்கு வருமானம் (முக மதிப்பு தலா ரூ.2/-) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை)<br>அ. அடிப்படை (ரூ.)<br>ஆ. இளகியது (ரூ.) | <br>5.57<br>5.57 | <br>5.12<br>5.12 | <br>14.06<br>14.06 | <br>20.53<br>20.53 |
| 14. | கடன் சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை) | 7.84 | 6.51 | 5.54 | 5.66 |
| 15. | வட்டி சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை) | 7.84 | 7.11 | 5.54 | 6.18 |

**குறிப்புக்கள்**

1. நிறுவனத்தின் தனிநிலை நிதி முடிவுகளின் சாராம்சம்

ரூ. கோடிகளில்

| வ. எண் | விவரங்கள் | தனிநிலை | | | |
|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | முடிந்த காலாண்டு | முடிந்த ஒன்பது மாதங்கள் | முடிந்த ஆண்டு |
| | | டிசம்பர் 31, 2025 | டிசம்பர் 31, 2024 | டிசம்பர் 31, 2025 | மார்ச் 31, 2025 |
| | | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்படாதது | தணிக்கை செய்யப்பட்டது |
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 16,271.35 | 13,094.86 | 44,213.75 | 48,902.50 |
| 2. | வரிக்கு முன் லாபம் | 304.68 | 530.66 | 1,182.39 | 1,698.21 |
| 3. | வரிக்கு பின் லாபம் | 223.36 | 460.56 | 955.35 | 1,443.76 |

2. மேற்கண்ட சுருக்க நிதிநிலை அறிக்கை, இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (பட்டியலிடுதலுக்கான கடமைகள் மற்றும் பிற வெளியீடுகளுக்கான தேவைகள்) நெறிமுறைகள் 2015, விதி எண் 33ன் படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான காலாண்டு / ஒன்பது மாதங்கள் / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கையின் சுருக்கமாகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பான முழு அறிக்கை, இந்திய தேசிய பங்கு சந்தை (NSE) www.nseindia.com மற்றும் மும்பை பங்குசந்தை (BSE) www.bseindia.com ஆகியவற்றின் இணைய தளங்களிலும், நிறுவனத்தின் www.redingtongroup.com என்ற இணைய தளத்திலும் உள்ளன.
3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, நிறுவன இயக்குநர்கள் குழும கூட்டத்தில் பிப்ரவரி 4, 2026 ஒப்புதல் வழங்கப்பட்டது.

(Scan for full results)
https://redingtongroup.com/wp-content/uploads/2026/02/FINALSEIntimationFinancialsresultsreg33Feb4.pdf

**இடம் : சென்னை**
**தேதி : பிப்ரவரி 04, 2026**

**ரெடிங்டன் லிமிடெட் சார்பில்**
**எஸ் வி கிருஷ்ணன்**
**நிதி இயக்குனர் (முழுநேரம்)**



ரூ. 50 லட்சத்தில் புதுப்பிக்கப்பட்டு, மாற்றி நிறுவப்பட்டது

# கலைவாணர் அரங்கத்தில் என்.எஸ்.கிருஷ்ணன் சிலை: ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, பிப். 5–

**கலைவாணர் அரங்க வளாகத்தில் ரூ.50 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு, மாற்றி நிறுவப்பட்ட என்.எஸ். கிருஷ்ணனின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.**

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் திருவுருவச் சிலை சென்னை, தியாகராய நகரில் வாணி மகாலுக்கு அருகில் நான்கு சாலைச் சந்திப்பில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலக் குழுவினரின் செலவில் அமைக்கப்பட்டது. அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சரான கலைஞர் தலைமையில் முதலமைச்சரான அண்ணாவினால் 14.1.1969 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மேலும், என்.எஸ். கிருஷ்ணனின் திருவுருவச் சிலை ஜி.என். செட்டி சாலையில் கட்டப்பட்ட மேம்பாலம் பணிக்காக 26.2.2008 அன்று அகற்றப்பட்டது. பின்னர், மேம்பாலப் பணிகள் முடிவுற்று ஜி.என். செட்டி தெரு, திருமலைப்பிள்ளை சாலை சந்திப்பின் அருகில் அமைக்கப்பட்டது.

## குடும்பம் கோரிக்கை

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் குடும்பத்தினர், அவரது திருவுருவச்சிலையை அவ்விடத்திலிருந்து அகற்றி சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவ வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார்கள். அக்கோரிக்கையினை ஏற்று, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் திருவுருவச்சிலை தற்போது இருக்கும் இடத்திலிருந்து பாதுகாப்பாக அகற்றி சென்னை, வாலாஜா சாலையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவப்படும் என்று முதலமைச்சர் 23.6.2025 அன்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் திருவுருவச் சிலை சென்னை, கலைவாணர் அரங்க வளாகத்தில் 50 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு, மாற்றி நிறுவப்பட்டு, முதலமைச்சரால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

## கே.என். நேரு, எ.வ. வேலு

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ. வேலு, தா.மோ. அன்பரசன், மு.பெ.சாமிநாதன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு, சென்னை மேயர் ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் விஜயா தாயன்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா.வைத்திநாதன், என்.எஸ். கிருஷ்ணனின் குடும்பத்தினர், நடிகை குமாரி சச்சு, நடிகர்கள் நாசர், கருணாஸ், சரவணன், போஸ் வெங்கட் உள்ளிட்ட திரைத்துறையை சார்ந்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் பேராசிரியர் நிகிதா மீது நடவடிக்கை: நீதிபதி உத்தரவு

மதுரை, பிப். 5–

**மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் பேராசிரியர் நிகிதா மீது நடவடிக்கை எடுக்க நீதிபதி உத்தரவிட்டார்.**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோவில் காவலாளியாக பணிபுரிந்த அஜித்குமாரை கடந்த 2025 ஜூன் 27ஆம் தேதி நகை காணாமல் போனதாக பேராசிரியர் நிகிதா கொடுத்த புகாரில் தனிப்படைக் காவலர்கள் விசாரித்தனர். அதில் ஜூன் 28ஆம் தேதி அவர் கொலை செய்யப்பட்டார். இந்த கொலை வழக்கில் 5 தனிப்படை காவலர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன் ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இதனிடையே அஜித்குமார் கொலை வழக்கை சிபிஐ விசாரணைக்கு மதுரை அமர்வு உத்தரவிட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கின்றனர்.

## சிறையில் 10 போலீசார்

தமிழகத்தையே உலுக்கிய இந்த கொடூர காவல்நிலைய மரணம் தொடர்பாக சிபிஐ விசாரித்து வருகிறது. இவ்வழக்கில் 10 போலீசார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சென்னை ஐகோர்ட் மதுரை கிளையில் நடைபெற்று வரும் இவ்வழக்கு, நேற்று நீதிபதி ஸ்ரீமதி முன்பாக விசாரணைக்கு வந்தது. கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன் ஆகிய 5 போலீசாரின் ஜாமீன் மனு மீது நேற்று விசாரணை நடந்தது.

அப்போது சிபிஐ தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் முகைதீன் பாஷா, அஜித்குமார் அடித்து கொல்லப்பட்ட சம்பவத்தில் 10 போலீசாருக்குமே தொடர்பு உள்ளது. ஆகையால் 10 போலீசாருக்கும் ஜாமீன் தரக் கூடாது” என கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். இந்த விசாரணையின் போது, “அஜித்குமார் மீதான நகை திருட்டு புகார் உண்மைதானா?” என நீதிபதி ஸ்ரீமதி கேள்வி எழுப்பினார். இதற்கு சிபிஐ தரப்பில், “நகை திருட்டு புகாருக்கு முகாந்திரம் எதுவுமே இல்லை. அதனாலேயே நகை திருட்டு புகார் என்பது முடித்தும் வைக்கப்பட்டுவிட்டது” என தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, மடப்புரம் கோயில் காவலாளி அஜித் குமார் மரண வழக்கை விசாரிக்கும் ஐகோர்ட் கிளை நீதிபதி ஸ்ரீமதி, மனது பதறுகிறது என்று கருத்து தெரிவித்துள்ளார். விசாரணையின் போது, ஒன்றும் இல்லாத விசயத்திற்கு அடித்துக்கொலை செய்து விட்டனர். புகார் அளித்தவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே? எனக் கேள்வி எழுப்பிய நீதிபதி, யாராக இருந்தாலும் சிறையிலேயே இருக்கட்டும், மனசு பதறுகிறது என வருத்தம் தெரிவித்து, காவல்துறையினருக்கு பாடம் புகட்ட வேண்டும் என்று கூறி வழக்கை பிப்ரவரி 17–ந் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

# தங்கம் சவரனுக்கு ரூ.4,640 குறைந்தது: வெள்ளி கிலோவுக்கு ரூ.20,000 குறைவு

சென்னை, பிப்.5–

**சென்னையில் தங்கம் விலை இன்று சவரனுக்கு ரூ. 4,640 குறைந்துள்ளது. வெள்ளி விலையும் கிலோவுக்கு ரூ. 20,000 குறைந்துள்ளது.**

தங்கத்தின் விலை தொடர்ந்து ஏற்றமும், இறக்கமுமாக இருந்து வருகிறது. கடந்த 29ந் தேதி ஒரு கிராம் தங்கம் ரூ.16,800 ஆக அதிகரித்து ஒரு சவரன் 1 லட்சத்து 34 ஆயிரத்து 400க்கு உச்சம் தொட்டது.

அதன்பின் விலை இறங்குவதும், ஏறுவதுமாக இருந்தது.

கடந்த ஓரிரு நாட்களாக விலை குறைந்திருந்த நிலையில், தங்கத்தின் விலை நேற்று முன் தினம் மீண்டும் உயர்ந்தது. சவரனுக்கு ரூ.2 ஆயிரத்து 560 அதிகரித்து, சவரன் ரூ.1 லட்சத்து 14 ஆயிரத்து 160 ஆக உயர்ந்தது. நேற்றும் தங்கம் விலை அதிகரித்தது. சவரனுக்கு ரூ.5,040 உயர்ந்து, ரூ.1,19,200க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் இன்று தங்கம் விலை குறைந்தது. சவரனுக்கு ரூ.4,640 குறைந்து ஒரு சவரன் ரூ. 1 லட்சத்து 14 ஆயிரத்து560க்கு விற்பனை செய்யப்படுகிறது.ஒரு கிராம் ரூ.580 குறைந்து ரூ. 14,320 க்கு விற்பனையாகிறது. வெள்ளி விலையும் இன்று குறைந்தது. வெள்ளி விலை இன்று கிராமுக்கு ரூ. 20 குறைந்து ரூ.300க்கும், கிலோவுக்கு ரூ. 20,000 குறைந்து ரூ.3 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# தமிழகத்தில் புற்றுநோய் பாதிப்பு ஒரு லட்சத்தைத் தாண்டியது

சென்னை, பிப்.5–

**தமிழகத்தில் கடந்த ஆண்டு புற்றுநோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு குறித்து மத்திய சுகாதாரத்துறை மற்றும் குடும்ப நல அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. அதன்படி தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு புற்றுநோய் பாதிப்பு முதல்முறையாக ஓராண்டில் ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது.

2025ம் ஆண்டு தமிழ்நாட்டில் 1,00,097 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்கள் 53,542 பேர், ஆண்கள் 46,555 பேர். பாதிப்பு கடந்த 2020ல் 68,750, 2021ல் 76,968 ஆகவும், 2022 ல் 89,265 ஆகவும், 2023ல் 92,816 ஆகவும், 2024ல் 96,486 ஆகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் அதிகமாக மார்பக புற்றுநோய், கருப்பைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்கள், வாய்ப்புற்றுநோய், பெருங்குடல் மற்றும் வயிற்றுப் புற்றுநோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

## சென்னையில் 8,505 பேர் பாதிப்பு

அதிகபட்சமாக சென்னையில் 8,505 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு உறுதியாகியுள்ளது. அடுத்து காஞ்சிபுரத்தில் 7,295 பேருக்கும் வேலூரில் 6,525 பேருக்கும் உறுதியாகியுள்ளது.

புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் நோய் கண்டறிதலையும் அதற்கான சிகிச்சை முறைகளையும் தீவிரப்படுத்த வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் 14 வயதுடைய பள்ளி மாணவிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடி மீண்டும் 28ந் தேதி தமிழகம் வருகை

மதுரை பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார்

சென்னை, பிப்.5–

**பிரதமர் மோடி 28–ந்தேதி மீண்டும் தமிழகம் வருகிறார். மதுரையில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.**



தமிழகத்தில் அடுத்த 2 மாதத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராகி வருகின்றன.

கூட்டணி குறித்த பேச்சு வார்த்தையை பரபரப்பாக நடத்தி வருகின்றன. இந்த நிலையில் தமிழகத்தில் அண்ணா தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல் பொதுக்கூட்டம் கடந்த மாதம் (ஜனவரி) 23ந் தேதி சென்னையை அடுத்த மதுராந்தகத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய பிரதமர் மோடி, தமிழகத்திற்கு "இரட்டை என்ஜின் ஆட்சி தேவை" என்று பேசினார். இதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "டப்பா என்ஜின் ஆட்சி எல்லாம் தமிழகத்தில் எடுபடாது" என்று கருத்து தெரிவித்தார்.

இதுதொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய் கட்சி விழாவில் பேசும்போது, "டாப் என்ஜின் நாம் தான்' என்று பேசினார். இப்படி பிரதமர் மோடியின் 'என்ஜின்' பேச்சு தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் பிரதமர் மோடி மீண்டும் தமிழகம் வர இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இம்மாதம் 28ந் தேதி (சனிக்கிழமை) மதுரையில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பேசுகிறார். இந்த கூட்டத்தில் கூட்டணிக் கட்சி தலைவர்கள் அனைவரும் பங்கேற்கிறார்கள்.



கலைவாணர் அரங்கத்தில் இன்று

# கைவினைப் பொருட்கள் கண்காட்சி, கருத்தரங்கைத் துவக்கினார் ஸ்டாலின்

சிறந்த 20 கைவினைஞர்களுக்கு ‘பொக்கிஷம், பூம்புகார்’ விருதுகளை வழங்கினார்

சென்னை, பிப்.5–

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை, கலைவாணர் அரங்கில், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்கள் மற்றும் கைவினைஞர்களின் திறனை உலக அளவில் பிரபலப்படுத்தும் விதமாக மாபெரும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை தொடங்கி வைத்தார்.**



மேலும், கைவினைத் தொழிலுக்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட 10 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 10 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி சிறப்பித்தார்.

## விருது பெற்றவர்கள் யார் – யார்?

2025–26–ம் ஆண்டிற்கான ”வாழும் கைவினைப் பொக்கிஷம்” விருதுகளை – நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த சி.குளுந்தான் (பித்தளை கலைப் பொருட்கள்), தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ந.ராஜேந்திரன் (இசைக்கருவி வீணை) மற்றும் கோ.ரெத்தினம் (தஞ்சாவூர் கலைத்தட்டு), சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சோ.கோபால் (இசைக்கருவி –சீர்யாழ்) மற்றும் சி.இந்திரா (தஞ்சாவூர் ஓவியம்),

செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த கோ.சுப்ரமணியம் (கற்சிற்பம்) மற்றும் தி.திருமூர்த்தி (மரச்சிற்பம்), சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த க.பால்ராஜ் (மரச்சிற்ப உட்பதிப்பு), கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த எஸ்.எஸ். சங்கீதம் (மரச்சிற்பம்), கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த கி.சுப்பிரமணியன் (கோயில் நகைகள்) ஆகிய 10 விருதாளர்களுக்கு முதலமைச்சர், வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்கான தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பட்டயம் மற்றும் தகுதிச்சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

“பூம்புகார் மாநில விருது” தமிழ்நாட்டின் 10 சிறந்த கைவினைஞர்களின் கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகளை கருத்தில் கொண்டு வழங்கப்படுகிறது. இவ்விருதுகள் ரூ.50 ஆயிரம் பரிசுத் தொகை, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பட்டயம் மற்றும் தகுதிச்சான்றிதழும் கொண்டதாகும்.

## பூம்புகார் விருது

அதன்படி, 2025–26–ம் ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதுகளை – தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த க.வெங்கடேஷ் (பஞ்சலோக சிற்பம்), சி.சங்கீதா (தஞ்சாவூர் ஓவியம்) மற்றும் அ.பாபு (தஞ்சாவூர் கலைத்தட்டு), விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த கு.ரீடா (உலோக தகட்டு வேலை) மற்றும் மு.ஷபானா (சுடுகளிமண் சிற்பம்), மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த சே.முருகன் (மரச்சிற்பம்),

செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அ.ராஜ் (கற்சிற்பம்), திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அ.கவ்வாபீவி (பாய் நெசவு) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தே.செலின் மேரி (சித்திரத்தையல்) மற்றும் சின்ன காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மு.குமார் (காகித கூழ் பொம்மைகள்) ஆகிய 10 விருதாளர்களுக்கு முதலமைச்சர் பூம்புகார் மாநில விருதிற்கான தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பட்டயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

இவ்விழாவில், அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தா.மோ. அன்பரசன், மு.பெ.சாமிநாதன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் வே. முதவல்லி, கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ச.அமிர்த ஜோதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மேல்மருவத்தூரில் நரிக்குறவர் இலவசத் திருமணம்: ஆன்மிக மக்கள் தொண்டு இயக்கத் தலைவர் நடத்தினார்

மேல்மருவத்தூர் , பிப். 5–

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள சித்தாமூர் ஒன்றியம் சிறுகருணை கிராமத்தில் வசித்து வரும் பாட்டாளி மக்கள் நரிக்குறவர் வரலட்சுமி – மாறனுக்கு வேல்மருவத்தூர் ஆன்மீக மக்கள் தொண்டு இயக்க தலைவர் ப.அன்பழகன் தலைமையில் இலவச திருமண விழா நடந்தது.



தமிழ் பாரம்பரிய முறைப்படி சீர் வரிசை வழங்கி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.

முன்னதாக ஆன்மீக மக்கள் தொண்டு இயக்கம் சார்பில் முகூர்த்த மேடையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. திருமணத்திற்கு வருகை தந்த செவ்வாடை தொண்டர்களுக்கு அட்சதை வழங்கினர். பின்னர் வண்ணமலர்கள் அட்சதையைத் தூவி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் இரும்புலி ஊராட்சி மன்ற தலைவர் சூர்யாகலா மன்மதன் பங்கேற்றார்.

அனைத்து ஏற்பாடுகளையும் ஆன்மிக மக்கள் தொண்டு இயக்க இயக்குனர் ஜி.கே.சதீஷ்குமார், சுந்தரம், சிவகுமார் லிங்கநாதன் கண்ணன் குமரன் ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, No.1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600024 on behalf of M/s. Newsmen Associates Private Limited. நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733910, E-mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு இ–மெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.